ரிஜிஸ்டர் நெ. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:— ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1.	ஈரோடு, ஸ்ரீமுக-௵ தை-௴ 29-௳ (11—2—1934)	மலர் 12.

இங்கர்சாலின் சொற்பொழிவுகள்.

கடவுள்

***

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையையும் உலகத்தோற்றத்திற்குக் காரணபூதமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

இந்நூலை, கடவுள் உண்டு என்பதற்கு அசைக்க முடியாத காரணங்களுண்டு என்று பெருமை பேசிக்கொள்ளும் ஆஸ்திகளும் கடவுள் என்ற வார்த்தையே உலகினின்று மறைந்துவிடச் செய்யவேண்டுமென்று இடைவிடாது தொண்டு செய்யும் நாஸ்திகர்களும், கடவுளைப்பற்றி மக்கள் கவலைகொள்ள வேண்டாமென்று கூறும் சுயமரியாதைக்காரர்களும், பஞ்சேந்திரியங்களுக்கும் எட்டாத பொருளை நம்பாத பகுத்தறிவு வாதிகளும் வாங்கிப்படித்துப் பார்க்கவேண்டிய அரிய நூல்.

அகிழுப ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது. 100 பக்கங்கள் கொண்டது.

விலை அணா 5.

புத்தகம் வேண்டுவோர் 1 அணா ஸ்டாம்பு அதிகமாக அனுப்பவேண்டும்.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

கத்தோலிக்கர்களின் வண்கூச்சல்.

இந்நூலில் கத்தோலிக்க மதப்பிரசாரத்தின் மடமையையும், மேனாட்டில் கத்தோலிக் மதத்தின் ஆபத்தான நிலையையும் அமெரிக்க நாஸ்திக அபிவிருத்தி சங்கத்தார போப்பிற்கு எழுதியுள்ள ஓர் கடிதமும் போப்வித்த அறிக்கையும் ஆராய்ந்து எடுத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. விலை 0—0—6,

நூறு புத்தகங்களுக்குக் குறையாது ஆர்டர் செய்தால் தபாற் செலவுடன் ரூ. 1—8—0. 500க்கு தபால் செலவுடன் ரூ. 5—0—0.

விலாசம்:—

குடி அரசுப்பதிப்பகம், ஈரோடு.

சாலாமிசிரி லேகியம்

(ரிஜிஸ்டர்டு)

சிறந்த தாதுபுஷ்டி மருந்து.

மிகுந்த பலத்தையும், வீரிய விருத்தியையும் உண்டாக்கும்.

இந்த லேகியத்தால் குணமாகும் நோய்கள்.

கை கால் அசதி
இடுப்புவலி
பலக்குறைவு
ஆயாசம்
நரம்புத்தளர்ச்சி
சொர்ப்பனஸ்கலிதம்

சம்போக காலத்திலேற்படும் துரிதஸ்கலிதம் முதலியவைகளை நீக்கும்.

ஆண் தன்மைமை அதிகரிக்கச் செய்யும். தளர்ந்த நரம்பைக்கெட்டிப்படுத்தும். வீரியத்தை விருத்தி செய்யும்

திடசரீரத்தைஉண்டாக்கும். மனதிற்கு உற்சாகத்தைக் கொடுக்கும். எவ்வளவுகடின வேலை செய்தாலும் யாதொரு களைப்பும் உண்டாகாது. சுக்கிலத்தை ஸ்தம்பனம் செய்யும். சம்போக இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச்செய்யும். சாப்பிட மதுரமுள்ளது.

ஆண், பெண், சிறுவர், வயோதிகர் யாவரும் சாப்பிடலாம். பத்தியமில்லை,

1-சேர் டப்பி ரூ. 2-8-0

பாக்கிங் தபால் செலவு பிரத்தியேகம். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவேண்டும். விலாசம் தெரிவித்தால் கேட்லாக் அனுப்பப்படும். கமிஷன் ஏஜண்டுகள் தேவை

டி. சி. சிந்தாரம் அண் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

உயர்ந்த முறையில் தயாரித்தவை. பரம்பரை வைத்திய சந்ததியிலுதித்தவரென்றும், சமஸ்தானவைத்திய நிபுணரென்றும் பழனியில் கியாதி வாய்ந்திருப்பதை நீங்கள் அறியீர்களா? எமது மருந்துகளில் ஒப்புயர்வற்றது.

மகா வரிய தங்கபஸ்பம்.

வெள்ளை, வெட்டை, கடுப்பு, பவுத்திரம், மூலம், நீரழிவு, க்ஷயம், இருமல், குன்மம், சூலை முதலிய சகல கொடிய வியாதிகளும் நீங்கும்.

அழிந்துபோன ஆண்மையையும், இழந்த பலத்தையும், இல்லற வாழ்வில் இன்பத்தையும் கொடுத்து, ஊக்கத்தையும், உற்சாகத்தையும் தந்து தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி, வயோதிகரை வாலிபராக்கி சதா பரமானந்தத்தைக் கொடுக்கக்கூடிய அபூர்வசக்தி இதற்கிருப்பதால் இதன் அரிய குணத்தைக்கண்டு ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. ஒருமுறை உபயோகித்துப்பாருங்கள்.

24-நாள் பஸ்பம் விலை ரூ. 10.

சர்வபடை நிவாரணி.

சகல மேகபடை, ஊரல், படர்தாமரை இவைகள் ஒரே நாளில் உதிர்ந்துவிடும். புட்டி 1க்கு 0—8—0.

அன்னிய நாட்டார் முன்பணம் அனுப்பவேண்டும்.

மலையப்பசாமி வைத்தியசாலை, பழனி.

விவாக விடுதலை.

(இந்து மனைவியருக்கு இன்றியமையாதது)

ஆசிரியர்:

கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்.

ஆராய்ச்சி நிரம்பிய இந்த அரிய நூல் ஒவ்வொரு மாதர் கையிலும், சீர்திருத்தக்காரர் சமதர்மி கையிலும் இன்றியமையாமல் இருக்க வேண்டியது. "'விவாக விடுதலை' என்னும் வேரின்றி மாதர் சுதந்தரம் என்னும் மரம் இல்லை" என்பது எவ்வாறென அறிய விருப்பின் இந்நூலை இன்றே படித்தல் வேண்டும்.

விலை அணா 4.

கிடைக்கும் இடம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டொன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

உள் நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்:—

மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

போல்ஷ்விக் அரசாட்சி எல்லா தேசங்களிலும் நன்மை பயக்குமா?

(தோழர் சே. நரசிம்மன் எம். ஏ.)

1924-ம் வருடம் தோழர் பர்ட்ரண்டு ரஸ்ஸல் [Bertrand Russel] அமெரிக்காவுக்குப் போயிருந்தபொழுது அத் தேசத்தில் பொது சமாசார விளக்கச் சங்கத்தின் ஆதரவின்கீழ் தோழர் ஸ்காட்நியரிங்குடன் [Scott Nearing] ஒரு டிபேட் [Debate] செய்தார். தோழர் சாமுயல் அண்டர்மியர் அன்று அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

தலைமைவகித்த தோழர் சாமுயல் அண்டர்மியர் அவ்விவாதம் ஆரம்பிக்கும் முன்னர் சொன்னதாவது,- மிகவும் பெயரும், புகழும் வாங்கிய இவ்விரண்டு பெரியார்களும் உலக முன்னேற்றத்திற்கே முக்கியமான இச் சமாசாரத்தைப்பற்றி என் தலைமையின் கீழ் பேச ஒப்புக்கொண்டது எனக்கு மிகச் சந்தோஷத்தை அளிக்கின்றது. இருவரும் மிக்க படித்த தீர்க்கதரிசிகள். தங்களுடைய சொந்த நன்மையை உலக மேம்பாட்டிற்காகவும், தாங்கள் எது நியாயம், சத்யம் என்று நினைக்கின்றார்களோ அதை நிலைநாட்டுவதற்கும் பெரும் தியாகம் செய்தவர்கள். தவிரவும் வீண் பிடிவாத நம்பிக்கையில்லாமல் பொது ஜனங்களின் நன்மையையே எக்காலத்திலும் தியானித்துவரும் பெரும் வீரர்கள், சாதாரண மனிதனுக்குச் சற்றும் புரியாத தத்துவ சாஸ்திரங்களிலும், இன்னும் மற்ற கலைகளிலும் நுட்பமான பல புத்தகங்களை எழுதிய சிரேஷ்டர்கள்.

அவர்கள் இருவரும் போல்ஷ்விக் அரசாட்சி எல்லா தேசங்களிலும் "நன்மை பயக்குமா?" என்பதைப்பற்றிப் பேசப்போகிறார்கள். பல தினசரிகளிலும் பத்திரிகைகளிலும் இச் சமாச்சாரத்தைப்பற்றி பலர் எழுதியிருக்கின்றனர். இவற்றில் சில சமாச்சாரங்கள் வெறும் கதைகளே. இன்னும் பல போல்ஷ்விக் அரசாட்சியை வெறுக்கும் பலரின் கட்டுரைகள். சில போல்ஷ்விக அரசாங்கத்தாரால் வெளியேற்றப்பட்ட பிரபுக்களால் இயற்றப்பட்ட நூல்கள். மற்றும் சில போல்ஷ்விக் அரசாட்சியில், சமதர்மதத்வங்கள் அனுஷ்டிக்கப்படுவதால், அது தங்கள் நாடுகளில் நடத்தப்படவேண்டுமென்ற ஆசையை உடைய பல அபிமானிகளின் கட்டுரைகள்.

தோழர் ஸ்காட்நியரிங் போல்ஷ்விக் அரசாட்சி மேற்கு தேசங்களிலும் நன்மை பயக்கும் என்ற கக்ஷியை விளக்கி சொல்லுவார். பின்பு தோழர் பர்ட்ரண்டு ரஸ்ஸல் போல்ஷ்விக் அரசாட்சி மேற்கு தேசங்களில் நன்மை பயக்க இடம் இல்லை என்று மறுத்துப் பேசுவார். பின்பு ஸ்காட் நியரிங். பர்ட்ரண்டு ரஸ்ஸல் எடுத்துக்காட்டிய கஷ்டங்களை மறுத்துப் பேசுவார். கடைசியாகப் பர்ட்ரண்டு ரஸ்ஸல் பதிலளிப்பார்.

தோழர் சாமுயல் அண்டர்மியர் பின்பு தோழர் ஸ்காட்நியரிங்கை போல்ஷ்விக் அரசாட்சி மேற்கு தேசங்களில் நன்மை பயக்கக்கூடுமென்பதைப் பற்றி பேசச் சொன்னார்.

தோழர் ஸ்காட்நியரிங் பேசியதாவது: —

சோவியத் அரசாட்சி முறை மேற்கு தேச நாகரீக முறைகளுக்குப் பொருந்துமா என்பது தான் கேள்வி. மேற்குத் தேச நாகரீகமென்றால் தற்காலத்தில் இங்கிலாந்து, அமெரிக்கா, ப்ரான்சு இன்னும் மற்ற தேசங்களில், குடியரசால் ஏற்படும் ராஜீய நிலைமையாலும், முதலாளித்வத்தால் ஏற்படும் பொருளாதார முறைகளாலும் அவைகளுக்கேற்ற சமூகக் கட்டுகளாலும் ஏற்படும் நாகரீகமே.

சோவியத் அரசாட்சி முறை நம் தேசத்தில், மேல் நாடுகளில் அதிக நன்மையைக் கொடுக்கும் என்று சொல்வதற்கு முன்னர் நான் மூன்று சமாசாரங்களை விளக்கவேண்டும். முதலாவது எக் காரணத்தால் ஓர் அரசாங்கமுறை ஒரு தேசத்துக்குத் தகுந்ததாகவிருக்கின்றது? இரண்டாவது சோவியத் அரசாங்க முறை என்றால் என்ன? மூன்றாவது என் அம்முறை மேற்குத் தேசங்களுக்கு நன்மைபயக்கும் என்பவையே.

முதலாவது எக் காரணத்தால் ஓர் அரசாங்கமுறை ஒரு தேசத்துக்குத் தகுந்ததாகவிருக்கின்றது? அரசாங்க முறைகள் சமூக ஸ்திதிக்குத் தகுந்தவைகளாகவிருக்கவேண்டும். உதாரணமாக ஆயிரம் வருடங்களுக்கு முன்னர் ஐரோப்பா, முழுவதும் [Feudal] பியூடல் சமூக முறையில் இருந்தது. அம் முறைப்படி வெகு சிலருக்குப் பூமியெல்லாம் சொந்தம். தேசத்திலுள்ள மற்றவர்கள் அப் பூமிகளைச் சாகுபடிசெய்து, பூமி சொந்தக்கார வெகு சிலருக்குத் தொண்டுசெய்து வாழ்ந்தனர். இந்தப் பூமிக்காரர்கள் தான் அரசாங்கத்தை நடத்தினர். ஏனெனில் அவர்கள் கையில்தான் பொருள் ஈட்டுவதற்கு வேண்டிய முக்கிய கருவி அக்காலத்திலிருந்தது.

பின்பு இவற்றிடையே கைத் தொழில்கள் ஏற்பட்டன. இக் கைத் தொழில்களால் ஏற்பட்ட சாமான்கள் விற்கவும், வாங்கவும் வியாபாரம் ஏற்பட்டது. அவற்றைப் பல நாடுகளில் விற்கத் துறைமுகங்களும், கப்பல்களும் உண்டாயின. இத் துறைமுகங்களிலும் பட்டணங்களிலும் முன்போல் பூமிக்காரன், தொண்டு செய்பவன் என்ற வித்தியாசம் போய் ஓர் புதிய சமூக அமைப்பு ஏற்பட்டது.

பின்பு சாஸ்திரப் பயிற்சியால் இயந்திரங்களும், பல மிஷின்களும் ஏற்பட்டபொழுது மேற்குத் தேசங்களில் விவசாயம், 1000 வருடங்களுக்கு முன்பிருந்த உயர்ந்த பதவியிலில்லை. வியாபாரம், கைத்தொழில் பாக்டெரிகள், தொழிற்சாலைகள் இவை ஏற்பட்டவுடன் தேசத்தில் முன்பு போல் பூமிக்காரன், குடியானவன் என்ற பிளவு போய், முதலாளி கூலிக்காரன் என்ற பிளவு ஏற்பட்டது. அது தற்காலத்தில் எல்லா மேற்குத் தேசங்களிலும் நன்கு பரவியிருக்கிறது.

இங்கிலாந்தில் பெயருக்கு ஓர் மன்னர் வெகு டாம்பீகத்துடன் அரசாளலாம். பிரான்சிலும், அமெரிக்காவிலும் குதூகலத்துடன் குடிகள் பிரசிடெண்டுகளை ஐந்து வருடங்களுக்கு ஒருமுறை தேர்ந்தெடுக்கலாம். ஆனால் ராஜ்யத்தை நிஜமாக ஆள்பவர் எவர்? முதலாளிகளும், பணக்காரர்களுமே. ராஜீய முறைகள் அவர்கள் நன்மைக்காகத்தான் ஏற்படுத்தப்படுகின்றன. அவர்கள் சொற்களுக்கிணங்க ராஜீய இயந்திரம் ஓட்டப்படுகின்றது.

ஆகையால் எக் காரணத்தைக் கொண்டு ஓர் அரசாங்க முறை ஒரு தேசத்துக்குத் தகுந்ததாகவிருக்கும்? அத் தேசத்து ஜனங்களின் வர்க்கத்தாலல்ல. [Race] அவர்கள் பேசும் பாஷையை ஒத்ததல்ல. அவர்கள் தழுவும் மதத்தாலல்ல. அரசாங்கமுறை பொருளாதார முறையையும், சமூகவிருத்தியையும் ஒத்திருக்கின்றதேயன்றி வேறல்ல. தற்காலத்தில் ஐரோப்பா முதலாளித்வ முறையைக் கையாண்டுவருகின்றது. அதற்குத் தகுந்த ராஜ்ய இயந்திரத்தையும் தேசம் தேசமாக ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

பின்பு ஏன் ருஷ்யாவில் மட்டும் சோவியத் கவர்ன்மெண்ட் ஏற்பட்டது?

என்ன பெயர்கள் வைத்துக் கொண்டபோதிலும் அரசாங்க முறைகள் பொருளாதார விருத்தியை ஒத்திருக்கின்றதல்லவா? ஆனால் சில சமயங்களில் அரசாங்க முறைகள் திடீரென்று உடைந்துபோய் மறைகின்றன. உள்ளிருந்தே வியாதி பீடித்து, முற்றி 1789-ம் ஆண்டில் பிரான்சு தேசத்தில் ஏற்பட்டதுபோல் பெரும் குழப்பம் ஏற்படலாம். வெளியிலிருந்து பல எதிரிகள் தோ

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

ஏழைகள் சிரிக்கிருர்கள்

இதயம் எப்படியிருக்கிறது?

ஒரு சிறு கதை.

(பாரதிதாஸன்)

எனது நண்பர் கோவிந்தன் ஆஸ்திகர். கொஞ்சம் பிடிவாத குணமுள்ளவர். சுயமரியாதைக் கட்சி அவருக்குப் பிடிக்காது. சமதர்ம மென்ருலோ சிரித்துக் கேலி பண்ணுவார். ஒரு நாள் மத்தியானம் 12 மணிக்குச் சாப்பாட்டைப் பற்றி அவருக்கும், அவர் தகப்பனுருக்கும் வார்த்தை நடந்துகொண்டிருந்தது. அச் சமயம் நான் அவர் வீட்டுத் தெருத் திண்ணையில் உட்கார்ந்திருந்தேன். நான் இருந்தது அவர்கட்குத் தெரியாது.

கோவிந்தன் (தன் தகப்பனுரிடம் மிக்க வருத்தத்தோடு சொல்லுகிருர்) அப்பா நான் தான் வேலையில்லாதிருக்கிறேன். நீங்களாவது வீட்டில் அடுப்புப் புகையும்படி முன் ஜாக்ரதையாய் ஏதாவது ஒரு ஏற்பாடு செய்திருக்கக் கூடாதா?

தந்தை:— என்ன செய்வது! இன்றைக்கு வேலை தருவதாகச் சொல்லி, அந்த மனிதன் திடீரென்று நாளைக்கு ஆகட்டும் என்று கையை விரித்துவிட்டான். இன்று மத்தியானச் சமயற்செலவிற்கு அம்மா சமாளித்துக் கொள்ளுவாள் என்று நினைத்தேன். அவளுக்கும் தோதில்லை போலும். இராத்திரி சாப்பாட்டிற்கு நான் எப்படியாவது ஏற்பாடு செய்கிறேன், அதுவரைக்கும் பல்லைக் கடித்துக்கொண்டிருக்க வேண்டியதுதான்,

(என்று சொல்லி, அடே அப்பா நீ வெளியிற்போக வேண்டியதிருந்தால் முகத்தைக் கழுவி நெற்றி நிறைய நாமம் போட்டுக்கொண்டு போ அப்போது தான் பட்டினி முகம் தெரியாது என்று வற்புறுத்தினர்)

பிறகு கோவிந்தன் நெற்றி நிறையநாமம் இட்டு வெளியில் வந்தார். என்னைக் கண்டு திடுக்கிட்டு இந்நேரம் நீர் இங்கு தானு இருந்தீர் என்று கேட்டார். தமது வீட்டின் நிலை எனக்குத் தெரிந்து விடுவதில் அவருக்கு விருப்பம் இராதது சகஜம். நான் இப்போது தான் வந்துகொண்டிருக்கிறேன் என்று, இரண்டு தடவை அழுத்திச் சொன்னேன்.

வெயிற்காலத்தில் நானும், அவரும் சாப்பிட்டவுடன் 3மைல் தூரத்தில் உள்ள காத்தான் பங்களாவுக்குப் போவது வழக்கம், புறப்பட்டோம்.

வழியில் சுயமரியாதை— சமதர்மம் இவற்றைப்பற்றிய வாதம், என் நண்பரின் முரட்டு மறுப்பு, எனது திகைப்பு, கொஞ்சம் மௌனம், இவற்றைத தாண்டியதும் இன்றையஉலக நிலையின் ஒரு துளியை நாங்கள்பருக நேர்ந்தது:—

வயற் புரத்திலிருந்த களிப்பு மண்ணையெல்லாம் ஒரு புறத்திற் குவித்துக்கொண்டிருந்தனர் சில தொழிலாளர். சேர்த்த மண்ணில் கிணற்று ஜலத்தை மொண்டு மொண்டு ஊற்றிச் சேருக்கிக் கொண்டிருந்தனர் மற்றும் சிலர். அங்கிருந்து கூப்பிடு தூரத்தில் பதப்படுத்திய சேற்றைக் கட்டிக்கொண்டு கற்கள் அறுத்துக் கொண்டிருந்தனர் வேறு சிலர். பதப்படுத்திய சேற்றுக் குவியலண்டையில் சில ஏழைத் தொழிலாளர் குனிந்து, முதுகைப் பலகைபோல் காட்ட அம் முதுகில் நிறையக் களிமண்ணை ஏற்றிக் கல்லறுக்கும் இடத்திற்கு அனுப்பிக்கொண்டிருந்தனர் இன்னும் சில தோழர். நல்லவெயிலுக் கிடையில் மணி இரண்டு ஆயிற்று. மரத்து நிழலில் கஞ்சிக் கலயத்தோடு காத்திருந்த இவர்களின் பெண்டிர்களில் ஒருத்தி வீட்டிற் கைப்பிள்ளையைப் போட்டு விட்டு வந்தேன்என்று கதறினள். வயிற்றில் பசித் தீ எரிந்து கொண்டிருக்கும் விஷயம் அப்போது தான் அத் தொழிலாளர்கட்கு ஞாபகம் வந்தது. உள்ளங்கைகளை மாத்திரம் ஒருவாறு சுத்தம் செய்துகொண்டு கஞ்சி குடிக்கத் தாவினர்கள். அவர்கள் தேகத்திலிருந்து வடிந்த வியர்வை நீரை விடக் குறைந்த இடையுள்ள அந்தக் கஞ்சி கலந்த நீரை உண்டு அவர்கள் திருப்தி யடைய வேண்டியிருந்தது.

என் நண்பர் கோவிந்தன் இக் காட்சியை உருக்கமாகவே நோக்கினர். நான்— இந்த ஆலில் எத்தனை மணிக்குக் கூலியும் என்பது உமக்குத் தெரியுமா?

இந்தக் கேள்விக்கு அடியில் வருவதெல்லாம் என் நண்பருடைய பதில்: ஆம் 6-30 மணி வரைக்கும் இவர்கள் வேலை செய்தாக வேண்டும். காலை 7 மணிக்கு இவ் வேலை துவக்கப் பட்டது. மாலையில் அவர்கூலி 6 அணு தான். நாளைக்கு இந்த வேலையும் அவர்கட்குக் கிடைக்காமற் போகலாம். கிடைக்காவிடிற் பெண்டு பிள்ளைகள் சகிதம் பட்டினிதான். இவர்கட்கு வீட்டு வசதியோ, சுகாதார வசதியோ, பஞ்சம். இவ்வளவும் உண்மை. இது பற்றி நீர் என்ன சொல்ல வருகிறீர்?

பொது நன்மையை முதலாளிகள் வசப்படுத்திக் கொண்டது தானே இவர்களின் இவ்விதத் துன்பத்திற்குக் காரணம் என்று நான் கேட்டேன்.

நண்பர்— இவர்கட்குத் துன்பமா? அதோ பாரும் அவர்களின் சந்தோஷ ஆரவாரம்!

உண்மையில் அவர்கள் தமக்குள் மாமன், மைத்துனன் முறை கூறிச் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்கள். ஆயினும் அவர்களின் உள்ளத்தின் அடித்தலம்?........இதை என் நண்பருக்கு எவ்வாறுகாட்ட முடியும்!

நாங்கள் நடந்தோம் மற்றும் வழியில், இடையிற் கோவணத்தோடு வெயிலின் களைப்போடு மூங்கில் வெட்டுவோரும், முழங்காலளவு வயற் சேற்றில் நீந்தியபடி ஏரடிப்போரும், தலை நட்டு முதுகைக் குனித்தபடி வரப்புத் திருத்துவோரும் ஏற்றம் இறைப்போரும், பாத்தி கட்டுவோரும் தங்கள் அபிலாஷை லக்ஷியம் அனைத்தையும் அறை வயிற்றுக் கூழிற் புதைத்து விட்டு மீதியுள்ள உடலால் ஓயாது உழைத்துக் கொண்டிருந்தார்கள்.

அங்கோரிடத்தில் ஆற்றுப் பாலம் கட்டிக்கொண்டிருக்கும் கருமார், கொல்லூற்றுக்காரர், தச்சர் ஆகியோரின் உடலும் தோளும் பம்பரம் போல் ஆடிக்கொண்டிருந்தன. அக் காட்சியைக் கோவிந்தனிடம் காட்டி இந்தப் பாலத்தைக் கட்டிக் கொடுப்பதாக ஒப்பந்தம் செய்து கொண்ட முதலாளிக்கு இந்தப் பாலம் கட்டிமுடியும் வரை மீ 1க்கு 1000 ரூபாய் வருமானம் வரும் என்று நினைக்கிறேன். இவ் வொப்பந்தத்தைத் தொழிலாளரே நேரே அடைந்திருந்தால் அவர்கட்குத் தினம் 1க்கு கூலி சராசரி 4 ரூபாய் கட்டக்கூடும். அந்த 4 ரூபாயில் 2 ரூபாயே அவர்களுக்கு போதும் என்று நினைத்தால் அவர்கள் தினம் 4மணிநேரம் வேலை செய்தால் போதுமானதாயிருக்கும் ஏதோ அசந்தர்ப்பத்தால் ஒருவனிடம் முதல் சிக்கிவிட்டால் அந்தக் காரணத்தால் பொது மக்களிடம் ஏழ்மை உண்டாகிவிடுகிறது. அதன் பிறகு முதலாளிக்கு முதல் வளுப்பது தவிர தொழிலாளிக்கு எந்த வகையிலும் முன்னேற்றம் இருக்க வழியில்லை. இதே ரீதியில் இவ்வுலகம் நடைபெற்ருல் உலகின் எதிர்கால நிலை மக்களை உயிரோடு புதைக்கும் மயான மாகிவிடும் என்பதை நீர் ஆக்ஷேபிக்கிறீரா?

இதற்குப் பதிலாக என் நண்பர் அதோ பாரும் அத் தொழிலாளர்சிட்டுக் குருவிகள் போல் உற்சாகமாக வேலை செய்கிருர்கள் என்று சொன்னர். நாங்கள் போய்ச் சேரவேண்டிய பங்களா இன்னும் சற்றுத் தூரத்தில் இருந்தது. என் நண்பர் முகத்தில் கொஞ்சம் சுருக்கம் ஏற்பட்டது. நடை ஓடவில்லை வெளிக்குக் காட்டிக்கொள்ளவில்லை. இது மாத்திரமன்று, ஓர் வரப்பை விட்டு இறங்கும்போது அவர் குப்புற விழுந்ததற்குக் காரணத்தையும் அவர் என்னிடம் மறைத்துச் சொல்லி மழுப்பினர். நாங்கள் பங்களாவை அடையுமுன் பங்களாவில் எமக்கு இடம் அகப்படாது என்று தெரிந்து விட்டது. வேலை நிறுத்தம் செய்த ஆலைத்தொழிலாளர் பங்களாவில் நிறையக்கூடியிருப்பதை வழியிற் கேள்விப் பட்டோம்.

எனது நண்பர் எதிரில், எனக்கும் நகரத்திற் சென்று சில்லரை வேலை செய்து விட்டு வீடு திரும்பும் சில ஏழைத் தோழருக்கும் கீழ்வரும் சம்பாஷணை நடந்தது.

நான்:— இறைக்கு நீங்கள் தலைக்கு என்ன சம்பாதித்தீர்கள்.

ஏழைகள்:— 4 அணு வீதம் சம்பாதித்தோம்.

நான்:— உங்கட்குக் காலுக்குச் செறுப்பில்லையா? குடை யில்லையா? உங்கள் சரீரம் இளைத்துப்போக காரணம் என்ன? நீங்கள் நோய் நொடியின்றி வாழ முடிகிறதா? உங்கள் வாலஸ்தலம் எப்படிப்பட்டது?

அவர்கள் சொல்லுகிறார்கள்; சுகத்திற்கு எங்கே போவது? அடிக்கடி நோயாற் பீடிக்கப் படுகிறோம். ஆயினும் கடவுள் இட்ட படி தானே கிடைக்கும். ஏற ஆசைப்பட்டால் எவ்வாறு கிடைக்கும்?

அந்தோ நண்பரே பார்த்தீரா! கடவுளும், கடவுள் மக்களை முன்னேற்றுவிக்கச் செய்த மதமும், அந்த மதம் கற்பித்த மூட எண்ணங்களும் மக்களை ஏற ஆசைப்படவும் வேண்டாம் என்று குறுக்கே படுக்கின்றன. என் நண்பருக்கு இந்த வார்த்தையில் ஒன்றும் காதில் விழவில்லை. அவர் மார்பு வலிக்கிறது, மார்பு வலிக்கிறது என்று அலறினர். உஷ்ணம் அதிகப்பட்டால் எனக்கு மார்பு வலி வந்து விடும் என்றும் நலிந்து கூறினர். | கோவிந்தனைக் கையில் அணைத்தபடி தேறுதல் கூறிப் பங்களாவுக்குள் ஓர் அறையிற் சேர்த்தேன். கோவிந்தனுக்குச் செய்ய வேண்டிய சிகிச்சை யென்ன?உணவு தர வேண்டியதைத் தவிர வேறொன்று மில்லை என்பது தான் என் எண்ணம். அதற்காகத் தான் ஓடினேன். மாலைப்போது மணி நான்கும் ஆகி விட்டது.

இதற்குள் பங்களாவில் நிறைந்திருந்த தொழிலாளரிடமும் ஒரு விதபரபரப்பு ஏற்பட்டது. தொழிலாளர் அன்று ஆலைச் சொந்தக்காரரிடம் அத்து மீறி நடந்து விட்டார்கள். அதனுல் போலீஸ் அதிகாரி குற்றவாளிகளைத் தேடிக்கொண்டு அங்கு வந்தார். நிச்சயம் பொதுஜன அமைதிக்குப் பங்கம் ஏற்பட்டே இருக்கும். பெருங்கலகம் உண்டாகித்தான் இருக்கும். காருண்யமுள்ள சர்க்கார் நிலையில் பெருத குழப்பம்

தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

மனித சமூக ஒற்றுமைக்கு

மதம் முட்டுக்கட்டை.

பாழான மதவலையில் சிக்குண்ட தேசீய இயக்கம்.

மனுஷாபிமானிகள் என்ன சொல்லுகின்றார்கள்?

கடவுளையும் மதங்களையும் எதிர்த்தே தீரவேண்டும்.

[கொழும்பு தோழர் ஏ. எல். முஹம்மத் தமீம்]

'கடவுள்' என்ற வெறுஞ் சொல் என்று முதல் ஆரம்பமானதோ அன்றே உலகமனித சமூக ஒற்றுமைக்கும், பகுத்தறிவுக்கும் சாவு மணியடிக்கப்பட்டு (ஆனல் இந்த 20-ம் நூற்றாண்டில் அக்கடவுளுக்கும், அக்கடவுள் பெயரால் சர்வசாதாரணமாய் நிகழும் சகல அக்கிரமங்களுக்கும் சாவு மணியடிக்கப்பட்டு விட்டதோடு இதோ பகுத்தறிவுச் சூரியனும் உதயமாகி எங்கும் பிரகாசிக்கின்றது) உலகில் மதம், ஜாதி, புரோகிதன், அரசன், அடிமை, முதலாளி, தொழிலாளி, தனவந்தன் ஏழை தீண்டப்படுபவன், தீண்டப்படாதவன், ஆண், பெண் போன்ற வித்தியாசங்கள் உண்டாயின. இத்தகைய வித்தியாசங்கள் ஒரு சில சுயநலவாதிகளின் சோம்பேறித்தனத்தாலும், அறியாமையினலும் ஏற்பட்டதே அன்றி வேறன்று. எவ்வாறெனில் இடி, மின்னல், காற்று மழை, வெள்ளம், பூகம்பம் இன்னும் இதுபோன்ற அனேக இயற்கை யற்புதங்களால் ஏற்பட்ட பயத்தால் கடவுளும், கடவுள் பெயரால் மதங்களும், மதங்களின் பெயரால் ஜாதியும், ஜாதியின் பெயரால் அரசன், அடிமை, முதலாளி, தொழிலாளி தனவந்தன், ஏழை என்ற வித்தியாசங்களும், வேற்றுமைகளும் ஏற்பட்டன. எனவே மேற்கூறிய காரணங்களால் (மூலகாரணம் கடவுள்என்ற வெறுஞ்சொல்லால்) இன்று உலகில் எங்குபார்த்தாலும் உண்ண உணவின்றியும், உடுக்க உடையின்றியும், வசிக்க வீடின்றியும், சரியான சுகாதார வசதிகளின்றி கொடிய நோயாலும், அகால மரணத்தாலும் கோடானகோடி மக்கள் துன்பமடைகின்றார்கள் என்பது கண்கூடு. மக்களால் பசிப்பிணியைத் தாங்கமுடியாத காரணத்தாலேயே உலகில் கொலை களவு, விபசாரம், பொய், சூதுபோன்ற எண்ணிறந்த பஞ்சமாபாதகங்களும், மிக, மிகத்தாராளமாய் நடைபெற்று வருகின்றன. எனவே மனித சமூகம் இத்தகைய பரிதாபகரமான பாதாளத்தில் வீழ்ந்து தட்டுக்கெட்டுத் தடுமாறி, அல்லோல கல்லோலப் படும் அலங்கோலத்தைக்கண்டு இன்று உலகில் பகுத்தறிவாளர்கள் கடவுளோடும், விஞ்ஞான ஆராய்ச்சிக்காரர்கள் மதப்பித்தர்களோடும், தொழிலாளிகள் முதலாளிகளோடும், ஏழைகள் தனவந்தர்களோடும், தீண்டப்படாதவர் தீண்டப்படுபவரோடும், பெண்கள் ஆண்களோடும் யுத்தம் தொடுத்திருப்பது இயற்கையே. இத்தகைய கொடிய பித்தலாட்டங்களால் மனிதசமூகம் சதா சீரழிந்து போவதற்குத்தான் கடவுள் உலகத்தைச் சிருஷ்டித்தார் போலும்! (அத்தகைய கடவுளை நேரில் காணக்கூடுமாயின் எத்தனைகோடித் தோழர்கள் வஞ்சந்தீர்த்துக் கொள்ளுவார்கள்!)

உலகத்தைக் கடவுள்படைத்தாரோ, அல்லது கடவுளை உலகம்படைத்ததோ என்ற விஷயத்தைப் பற்றி நாம் ஏன் கவலைப்படவேண்டும்? நாம் (மனிதர்கள்) எல்லோரும் ஒரே விதமாக (சமத்துவமாக) புதிதாக உலகில் தோன்றினோம், இன்னுஞ் சிறிதுகாலத்தில் எல்லோரையும் போலவே ஒரேவிதமாக (சமத்துவமாக) உலகில் மறைந்துவிடுவோம் ஆகையால பூமியில் வசிக்கும் வரையும் எல்லோரும் நமக்குள்ள பகுத்தறிவின் உதவியால் சமத்துவமாக வாழ வேண்டியதுதானே! அவ்வாறு நாம் சமத்துவமாக வாழ்க்கையை நடத்தினுல் இன்று மனித சமூகத்தில் காணப்படும் கொடிய சம்பவங்களாகிய கொலை, களவு, விபசாரம், பொய், சூது, கோபம், பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி, அபிப்பிராயப்பேதம், ஜாதி வேற்றுமை, தேச வேற்றுமை, மதவேற்றுமை, இவைகள் நடப்பதற்கு அனுசரணையாகவும், தூண்டுதலாகவுமிருக்கும் மூடநம்பிக்கைகளையும், குருட்டுப்பழக்கவழக்கங்களையும் அடியோடொழித்து உலக மனிதசமூக விடுதலையையும், முன்னேற்றத்தையும், சாந்தியையம், சமாதானத்தையும் அடையமுடியாதபடி தடைசெய்து கொண்டிருக்கும் தங்கள் சுகமட்டுமே பெரிதெனக்கொள்பவர்களாகிய மதப்பாதுகாப்பாளர்களென்னும் பிராமணர்கள், முல்லாக்கள் பாதிரிகள் ஹாமதுருகள் (பௌத்த மதப் போதகர்கள்) போன்ற புரோகிதக் கூட்டத்திற்கும் இவர்களை ஒத்துப்பாடும் அரசர்கள், முதலாளிகள், கடவுள் குமாரன், கடவுள் அவதாரம் கடவுள் தூதர் மஹாத்மாக்கள் போன்றவர்களுக்கும் இப்பிரபஞ்சத்தின் கண்ணே இருக்க இடமுண்டோ வெனக் கேட்கிறேன்.

பிறக்கும்போதும், இறக்கும்போதும் சமத்துவ நிலையையுடைய மனித சமூகம் ஏன் வாழ்க்கையில் மட்டும் சமத்துவமாக இருக்கக்கூடாது? என்று கேட்டால் அது கூடவே கூடாது என்றும், அது கடவுளுக்கும், மதத்திற்கும் விரோதமானதென்றும் கோடிக்கணக்கான ஜனத்தொகையைக் கொண்ட மனித சமூகத்தின் இரத்தத்தைச் சதா உறுஞ்சிவரும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிறு புரோகிதக் கூட்டத்தார் கூக்குரல் போடுகின்றனர். அன்றியும் மனுஷ குணங்களில் சிறந்த மாண்புமிக்க மனுஷாபிமானத்தை அடிப்படையாகக்கொண்ட சமத்துவ வாழ்க்கை உலகில் ஒருபோதும் தலையெடுக்க முடியாதபடி இவர்கள் முன்னோர்கள் (தற்கால ஏழைகளின் முன்னோர்களை ஏமாற்றி) தின்றுகொழுத்து வந்தது போலவே இவர்களும், இவர்களின் இனிவரும் பாரம்பரையும் தின்று கொழுக்க வேண்டுமென்ற நோக்கத்துடனேயே பொருளும், பணமும் முள்ளவர்களாகிய (100க்கு 5 பெயர்களாகிய) அரசர்களையும், தனவந்தர்களையும் வசியப்படுத்திக் கொண்டு, மதங்களிலுள்ள மூடநம்பிக்கைகளாகிய கடவுள், தீர்க்கதரிசி (நபி) தேவதூதர்கள் (மலக்குகள்) நரகம், மோட்சம், இறுதித்தீர்ப்பு நாள், (ஹஷர்) மறுபிறப்பு, பாவம், புண்ணியம் இன்னும் இவைபோன்ற எத்தனையோ சுத்த சுயநலங்கொண்டதும், பகுத்தறிவுக்கும், விஞ்ஞான ஆராய்ச்சிக்கும் கொஞ்சமேனும் ஒத்துவராத வீண் அர்த்தமற்றபதங்களை சகல புஸ்தகங்களில் நுழைத்தும் அவைகளுக்கேற்ற விதமாய் கதைகளும், புராணங்களும் கட்டி நூல்களில் வெளிப்படுத்தியும், மாணவர்களுக்குச் சிறுவயதிலேயே உண்டாகும் இயற்கை யுணர்ச்சியையும், பகுத்தறிவையும் மழுங்கச்செய்து சதா மூடநம்பிக்கையிலும், குருட்டுப்பழக்கவழக்கங்களிலும் கொடிய வறுமையிலும் மூழ்கித்தவிக்கும்படி செய்தும், போலி பக்தியை உண்டாக்கும் மதக்கல்வியின் பெயரால் உண்மைக்கும், ஞாயத்திற்கும், அனுபவத்திற்கும் சற்றும் பொருத்தமற்ற பொய்யும், புளுகும் நிறைந்த கட்டுக்கதைகளையும் புஸ்தகங்களில் வெளியிட்டும், இன்னும் கோடிக்கணக்கான மக்கள் வசிக்க ஒரு சிறு குடிசையேனும் இல்லாமல் தவிக்கும் இற்றைநாளில் கூடகோபுரம், மாடமாளிகைகள் போன்ற கோயில்களும், மசூதிகளும், சர்ச்சுகளும், விஹாரைகளும் (பௌத்தர்களின் வணக்கஸ்தலம்) கட்டி அதில் இவர்கள் சொகுசாய் உண்டு உறங்கவும் ஏழை மஹாஜனங்களை ஆங்காங்கு வரவழைத்து முற்றும் மூடநம்பிக்கையில் மூழ்கும்படி அவர்களை நோக்கி "நாங்கள் கஷ்டப்படாமல் உண்டு உடுத்தி சொகுசாய் வாழ்வதைக் கஷ்டப்படுகிறவர்களாகிய நீங்கள் பார்த்து ஒரு போதும் கோபமோ, பொறுமையோ அடையாதீர்கள். எவ்வளவு கஷ்டமும் துன்பமும் அடைய வேண்டியிருந்தாலும் எள்ளளவும் பக்தியை (மூடநம்பிக்கையை) விட்டுவிடாமல் எல்லாவற்றையும் நல்ல இருதயத்துடன் பொறுத்துக்கொண்டு எங்களுக்கே உழைத்துப்போடுங்கள், அப்பொழுதுதான் மறுவுலகத்தில் கடவுளும்உங்களுக்கு மோட்சத்தைக் கொடுப்பார்" (ஒருவேளைச்சாப்பாடு கொடுக்கத் திண்டாடும் கடவுள் மறுவுலகத்தில் மோட்சத்தைக்கொடுப்பாராம்! என்னே கடவுளின் நிகரற்ற கருணை!!) என்ற பரம்பரையாகச் செய்து வரும் சூழ்ச்சியே இன்றுசெய்து வருகின்றார்கள்.

இது நிற்க, இற்றை நாளில் இயற்கை, விஞ்ஞானம், பகுத்தறிவு, சமதர்மம் என்பவைகளை நன்றாய் உணர்ந்தஅனேக கற்றறிந்தபண்டிதர்களும் தற்கால உலகின் உண்மை நிலையை அறிந்தும் அந்தோ! வேலையில்லாத் திண்டாட்டத்திற் கஞ்சியும் பஞ்சத்திற்குப்பயந்தும் சுயநலக்கூட்டத்தாராகியபுரோகிதர்களோடுசேர்ந்துகொண்டு பகுத்தறிவுக்கும் (மதம், ஜாதி தேசம் என்ற பெயர்களினல் ஏற்பட்ட) உலகமனித சமூக விடுதலைக்கும், ஒற்றுமைக்கும் முன்னேற்றத்திற்கும் எதிரிடையாக பத்திரிகைகள் மூலமாகவும், பிரசங்க வாயிலாகவும் தங்கள் வயிற்றுப்பிழைப்பை நடத்திவருகின்றார்கள். இந்தியாவில் ஏழைகளை வாட்டிவதைக்கும் பசிப்பிணியை அகற்ற ஆரம்பிக்கப்பட்ட தேசிய இக்கம் குறுகிய நோக்கங்கொண்டு உலகில் சதா நிகழும் சகல துன்பங்களுக்கும காரணமான கடவுள் நம்பிக்கையைப் பலப்படுத்தியும், மனித சமூகத்தைப்பிரித்து வேறுபடுத்தும் மதங்களை பாதுகாப்புகள் செய்தும், வெள்ளை முதலாளிகள் ஆட்சியில் வயிற்றுச்சோற்றுக்கும் மட்டும் கஷ்டப்படும் ஏழைகளை மீட்டி, ஜாதியபிமானமும் மதவைராக்கியமுங்கொண்ட கருத்தமுதலாளிகள் கையில் ஒபபடைக்கப் பார்க்கின்றது.

இன்னும் இந்த தேசிய இயக்கம் ஆரம்பமாகி இதுவரையும் பசியால் வாடும் ஏழைகளுக்கு ஒரு விதமான நன்மையும் செய்ததிலலை. இன்னும் பசிப்பிணியால் அவர்களுக்குண்டான தீவிர உணர்ச்சியையும, எழுச்சியையும் அஹிம்ஸா தர்மம், சாத்வீகம் சத்யாக்கிரகம் தக்ளி என்பவைகளைக்கொண்டு தடைசெய்து விட்டதோடு மீண்டும், மீண்டும் அவர்களைச் சட்டமறுப்பின் பெயரால் துன்பத்திற்குள்ளாக்கி வருகின்றது.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

கோவில்பட்டி தாலூகா முதலாவது சுயமரியாதை மகாநாடு, கீழ ஈரால்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி.

மகாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்.

சிறைசென்ற தோழர்கட்குப் பாராட்டு.

காந்தியின் ஹரிஜனப்பிரசாரக் கண்டனம்.

சமதர்மத் திட்டமே சிறந்தது.

இம் மகாநாட்டின் முதல் நாள் 27-1-34 நிகழ்ச்சியை முடித்துத் தலைவர் ஊருக்குப் புறப்பட்டபிறகும் மகாநாடு தொடர்ச்சியாக நடைபெற்றது. தோழர்கள் ப. ஜீவானந்தன், அ. பொன்னம்பலம் ஆகியவர்கள் "காந்தீயம்" என்பதுபற்றியும், ஹரிஜனம் பிரசாரத்தின் புரட்டுகளைப்பற்றியும் பண முடிப்பின் பயன் என்ன? என்பது பற்றியும் விரிவாகப் பேசினார்கள். தோழர்களுடைய சமதர்மக் கீதம் பாடல்கள் பாடியதுடன் இரவு 7-30 மணியுடன் முதல்நாள் மகாநாட்டு நிகழ்ச்சிகள் முடிந்தும் எல்லோரும் சாப்பாட்டிற்குச் சென்றார்கள்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி.

காலை 9-மணிக்கு 28-1-34 யன்று மகாநாடு மீண்டும் ஆரம்பமாயிற்று.

மகாநாட்டுக்குத் தூத்துக்குடி பிரபல வியாபாரியும், முனிசிபல் கவுன்சிலரும், துறைமுக சபை அங்கத்தினரும், சுயமரியாதை இயக்கத்தைச் சார்ந்தவருமாகிய தோழர் கூ. கா. ஆ பெரியசாமி அவர்கள் தலைமை வகிக்குமாறு தோழர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டு தலைமைவகித்து முன்னுரை கூறினார். தோழர்கள் ஆள்வார், நாஸ்திக சு. ரொட்டருக்ஸ் ஆகியவர்கள் சமதர்மக் கீதங்கள் பாடினார்கள். மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

தீர்மானங்கள்.

1. தீண்டாமைவிலக்கின் சாக்கில், ஹரிஜன சேவை என்னும் பெயர்கொண்டு தோழர் காந்தி வருணாச்சிரம மத, கடவுள் பிரசாரம் செய்து வருவது; சமதர்ம உணர்ச்சிக்கும், பகுத்தறிவு வளர்ச்சிக்கும் முட்டுக்கட்டையாயிருப்பதால் இம் மகாநாடு ஹரிஜன இயக்கத்தைக் கண்டிப்பதுடன், தோழர்காந்தியின் தென்னாட்டு விஜயத்தைப் பகிஷ்கரித்துப் பொதுஜனங்கள் ஏமாறாதிருக்கும்படியாகக் கேட்டுக்கொள்கிறது.

பிரேரேபித்தவர்:- தோழர் நீலாவதி

ஆமோதித்தவர்:-

தோழர் ஜீவானந்தன்

ஆதரித்தவர்:-

தோழர் அ. பொன்னம்பலம்

2. ஈரோட்டில் நடந்த வேலைத் திட்டக் கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்களை இம் மகாநாடு முழு மனதுடன் ஒப்புக்கொண்டு மாகாண மகாநாட்டுக்கும் சிபார்சு செய்கிறது.

பிரேரே:-

தோழர் அ. பொன்னம்பலம்

ஆமோ:-

தோழர் ப. ஜீவானந்தன்

ஆதரி:-தோழர் வேல் வெள்ளைச்சாமி

3. (a) ஏழை எளியவரின் கல்வியைவிட, பணக்காரரையே பிரதானமாகக் கருதும் ஆட்சி முறையின் போக்கை எடுத்துக் காட்டி, ஏழை எளியவராகிய பொது மக்களை வரும் தேர்தலில் ஜாக்கிரதையாயிருக்கும்படி எச்சரிக்கை செய்த கட்டுரைக்காக (124-அ.) தோழர் ஈ. வெ. ரா. அவர்கள் பேரில் இராஜ நிந்தனைக் குற்றஞ் சாட்டி தண்டித்த அரசாங்கத்தின் செயலை வருத்தத்துடன் கண்டிப்பதுடன், சமதர்மத் தோழர்களுக்கு எடுத்துக் காட்டாகவும், முன்னோடியாகவும் தண்டனையைப் புன்முறுவலுடன் ஏற்றுக்கொண்ட தோழர் ஈ. வெ. ரா. அவர்களை இம்மகாநாடு பாராட்டுகிறது.

(b) பதிப்பாசிரியர் என்கிற முறையில் மேற்படி குற்றத்திற்காக தண்டனையை மகிழ்வுடன் ஏற்றுக்கொண்ட தோழர் எஸ். ஆர் கண்ணம்மாள் அவர்களின் இயககப் பற்றையும் வீரத்தையும், இம் மகாநாடு பாராட்டுவதுடன், தோழர் அவர்களின் செய்கை இபக்கத் தோழர்கள் இரு பாலருக்கும் அறிய எடுத்துக் காட்டாயிலங்குமென்றும் எதிர்பார்க்கிறது.

பிரேரே:- எம். வைகுண்டம்

ஆமோ:- சிமோன் வேப்பலோடை

ஆதரி:- ப. ஜீவானந்தம்

4. அ. பிரசாரக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தி, தாலூகா முழுவதிலும் கிராமங்கள்தோறும் இயக்க வளர்ச்சிக்காக சுயமரியாதை சமதர்மச் சங்கங்களும், வாசகசாலைகளும் நிறுவ வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

ஆ. கீழ்காணும் தோழர்கள் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களாக இம் மகாநாடு தேர்ந்தெடுக்கிறது.

1. சங்கரசதாசிவன் குளத்தூர், 2. கே. செல்லையா வேப்பலோடை 3. கு. அ. ச. கிருஷ்ணசாமி குருவிக்குளம், 4. நா. சு. சுப்பையா தென்னம்பட்டி, 5. ஏ. ஜே. தேவதாஸ் தென்னம்பட்டி, 6. எ. எல். ராமகிருஷ்ணன் அச்சங்குளம், 7. சிதம்பரநாதன் கோவில்பட்டி, 8 கரு. நா. மு. பெ. பொன்னுசாமி ஈரால், 9. வேதமுத்து புதியம்புத்தூர் 10 எஸ், சண்முகம் மேல்மாந்தை

பிரேரே:- தோழர் கரு. நா. மு. வெ. பொன்னுசாமி கீழாஈரால்.

ஆமோ:- கு. அ. ச. கிருஷ்ணசாமி குருவிகுளம்.

5. சீக்கிரமாக மாகாண மகாநாட்டைக் கூட்டவேண்டுமென்று (பொதுவாக) நிர்வாகக் கமிட்டியாரையும் (சிறப்பாக) காரியதரிசி அவர்களையும் இம் மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

பிரேரே:- தோழர் கரு. நா. மு. பெ. பொன்னுசாமி கிழாஈரால்

ஆமோ:- தில்லை நடராஜன் கீழ ஈரால்

ஆதரி:- ப. ஜீவானந்தம்

6. மூடப் பழக்கவழக்கமுள்ள நம் இந்தியாவில் எதிர்கால உலகிற்கு விஞ்ஞானம், கைத்தொழில் கற்றுக் கொடுக்கப்படாத நிலைமையில் பாடப் புஸ்தகங்கள் அமைக்கப் பட்டிருக்கிறது. கடவுள், மதம், ஜாதி என்ற மூட நம்பிக்கைகொண்ட புஸ்தகங்களை ஓர் மாணவன் சுமார் 20-வயதுவரை கற்று பின் அவனை சமதர்ம உலகிற்குத் திருப்புவது. அதிகக் கஷ்டம் ஏற்படுகிறது. ஆகையால் சமதர்ம இயக்கத்திற்கென்று பங்கு ஒன்றுக்கு ரூ. 10-வீதம் 10000 பங்குகள் கொண்ட 100000 ரூபாய் மூலதனத்தால் போர்டிங் ஸ்கூல் ஒன்று அவசியம் ஏற்படுத்த வேண்டுமென்பதை இந்த மகாநாடு மாகாண மகாநாட்டுக்குச் சிபார்சு செய்கிறது.

தீர்மானங்கொண்டு வருபவர்:— தோழர் ஏ. ஜெ. தேவதாஸ் செக்ரிடெரி, சு ம. வாலிபர் சங்கம், தென்னம்பட்டி.

ஆமோ:- தோழர் யாக்கோபு அவர்கள், த. சண்முகபுரம்.

7. மாண்ட்போர்டு சீர்திருத்தத்தால் நம்மவர்களுக்கு சிறிது வழங்கப்பட்ட தாலூக்காபோர்டுகளைக் கலைத்துவிடுவதாக சென்னை அரசாங்கத்தார் முன்வந்திருப்பதற்கு இம் மகாநாடு மகிழ்ச்சியைத் தெரிவிப்பதோடும், கலைக்கப்பட தாலூக்காபோர்டுகளை ஜில்லாபோர்டுடன கமிஷனர் மேல்பார்வையில் சேர்த்து, ஜனங்களை முற்போக்கடையும்படி செய்ய சென்னைமாகாண அரசாங்கத்தாரை இந்த மகாநாடு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

பிரேரே:- தோழர் ஏ. ஜெ. தேவதாஸ், செக்ரிடெரி.

ஆமோ:- தோழர்கள் வைகுண்டம் தூத்துக்குடி, கு. அ. ச. கிருஷ்ணசாமி.

8. குளத்தூரில் சமதர்ம உணர்ச்சியுள்ள தோழர்கள் சமபந்திபோஜனம் நடத்தியதற்காக அங்குள்ள வர்ணாச்சிரம தர்ம வெறிகொண்ட நாடார் தலைவர்கள் ஜாதிப்பிரஷ்டம் செய்வதாகப் பயமுறுத்தி அபராதம் வசூலிக்க எத்தனிப்பதை இம் மகாநாடு கண்டிக்கிறது,

பிரேரே:- தோழர் எம். வைகுண்டம்.

ஆமோ:- வேல் வெள்ளைச்சாமி

மகாநாட்டுத் தலைவர் அவர்கள் தனது முடிவுரை கூறினபிறகு, வந்தனோபசாரத்துடன் மகாநாடு இரவு 8-30 மணிக்கு இனிது முடிவடைந்தது இரவே மகாநாட்டுப் பிரதிநிதிகள் பலர் தங்கள் தங்கள் வெளியூர்கட்கு பயணமானார்கள் தோழர்கள் அ. பொன்னம்பலம், ப. ஜீவானந்தம் ஆகியவர்கள் 29-2-30 சென்னை, மதுரை மார்க்கமாக திருச்சிக்கும்! ஈரோட்டிற்கும் புறப்பட்டார்கள்-

மகாநாட்டுத் தீர்மானங்கட்குப் பிறகும் மத்தியான சாப்பாடு முடிந்தும் தொடர்ச்சியாகத் தோழர்கள் அ. பொன்னம்பலம், ப. ஜீவானந்தன் ஆகியவர்கள் 'சமதர்மத் திட்டம்' 'பெண்கள நிலைமை' 'சமூகசீர்திருத்தம்' என்பதுபற்றிப் பேசினார்கள். ராஜாஸ்கூல் மாணவிகள் சமதர்மக் கீதங்கள் பாடினார்கள். மற்றும் சிலரும் பாடினார்கள்.

சென்னை சுயமரியாதை இளஞர் மன்றம்

மேற்படி மன்றத்தின் கூட்டமொன்று 4-2-34 ஞாயிற்றுக்கிழமை பகல் 2மணிக்கு 221 தங்கசாலை வீதியில் கூடிற்று, அதுசமயம் தோழர் கே. எஸ். நாதன் தலைமை வகித்தார் கீழ் காணும் தீர்மானம் மன்றத்தின் காரியதரிசி தோழர் டி. சம்பந்தம் அவர்களால் கொண்டுவரப்பட்டு நிறைவேறியது.

இக் கூட்டம் பிராமணரல்லாதார் கக்ஷியின் பிரபலஸ்தரும், நமது இயக்க அனுதாயியுமான தோழர் வி. சிவப்பிரகாச முலியார் மரணமுற்றதை குறித்து வருந்துவதுடன் மேற்படியார் குடும்பத்தாருக்கு தங்கள் அனுதாபத்தைத்தெரிவித்துக் கொள்ளுகிறது.

(ஒரு நிருபர்)

ரோஜா முத்தையா

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

இன்னும் இந்தியாவில் இத்தனை மதச்சண்டைகளும், ஜாதிச்சண்டைகளும் தினசரி தப்பாமல் நடைபெறுகிறதென்றால் மதவைராக்கியமும், ஜாதிவைராக்கியமுங் கொண்ட இந்திய முதலாளிகள் வசம் நாளை இந்தியா ஒப்படைக்கப்பட்டால் இந்தியா அதோகெதியாகிவிடுமென்பதில் என்ன சந்தேகம்? இன்றும் தோழர் காந்தியார் தாழ்த்தப்பட்ட மக்களை முன்னேற்றுவதற்கு ஹிந்துமதத்தில் தீண்டாமைக்கு இடமில்லையென்று சொல்லிக்கொண்டு எப்பொழுது ஹரிஜன இயக்கத்தை(கடவுளுக்கும், மதங்களுக்கும் சாவுமணியடிக்கும் பகுத்தறிவு மிகுந்த இந்த 20ம் நூற்றாண்டில் மீண்டும் கடவுள் நம்பிக்கையற்றுப் போகாமல் பலப்படுத்தவும் மதங்கள் அழிந்துபோகாமல் ஸ்தாபிப்பதற்கும் செய்யும் சூழ்ச்சியே இந்த ஹரிஜன இயக்கமாகும்) ஆரம்பித்திருக்கிறதையும் டாக்டர் ஆலம்போன்ற தேசிய வாதிகள் வகுப்புவாதம் ஒழிவதற்குப் பாடுபடுவதையும் நோக்குங்கள் "ஜாதி பேதத்தையும், வகுப்புவாதத்தையும் ஒழியுங்கள் எல்லோரும் ஒற்றுமையாகுங்கள் அப்பொழுது சுயராஜ்யம் பெற்றுக்கொள்ளலாம் என்ற மாதிரியில் பிரசாரம் செய்து வருகின்றார்கள். இவர்களுடைய இச்செய்கையால் ஒரு சிறிதேனும் பலன் கிடைக்குமென்று எதிர்பார்ப்பது வீண் பகற்கனவேயாகும். ஏனெனில் வகுப்புத்துவேஷங்களையும், ஜாதி வித்தியாசங்களையும் நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்த்துவரும் மதங்களுக்கு (மூடக் கொள்கைகளுக்கு) முதல் பாதுகாவல் அளித்துவிட்டு வகுப்பு வாதத்தையும், ஜாதி வித்தியாசங்களையும் ஒழிக்க முயற்சி செய்து வருவது "பாலுக்குங்காவல், பூனைக்குந்தோழன்" என்ற பழமொழிக்கொப்பாயிருக்கிறது. எனவே கோடிக்கணக்கான ஏழைகளின் சகிக்க முடியாத மறுமையை நீக்குவதற்கென எழுந்த—எல்லோரும் நம்பியிருந்த தேசீய இயக்கமும் (உலகில் இதுகாறும் நிகழ்ந்ததும்—நிகழ்வதுமான பஞ்சம், யுத்தம், கொலை, களவு, விபசாரம் போன்ற சகல அக்கிரமங்களுக்கும் காரணபூதமாயுள்ள) மதங்களின் வலையில் அகப்பட்டுத் தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

சென்ற காலங்களில் காட்டுமிராண்டி வாழ்க்கையிலிருந்த மனித சமூகத்தை முன்னேற்றுவான் வேண்டி ஒவ்வொரு காலங்களிலுமிருந்த பகுத்தறிவாளிகளால் ஆக்கப்பட்ட சட்ட திட்டங்களே பிற்காலத்தில் மதங்களாயினவென்றும், அச்சட்டதிட்டங்கள் நாகரிகமற்ற காலங்களில் அவரவர்களுக்கிருந்த அறிவு, ஆராய்ச்சிக்குத் தக்கபடி புலப்பட்ட மாதிரியே உண்டாக்கப்பட்டனவானதால் நாகரிகமடைந்த இக்காலத்தில் உலக மனித சமூக சமஉரிமை, ஒற்றுமைக்கு முற்றும் முரணாக இருப்பதோடு, அவைகளால் மனித சமூகம் பெரும் துன்பம் அடைந்து வருவதாலும அவைகளை ஒழித்து விட்டு இக்கால மனித சமூக ஒற்றுமைக்கும், சமத்துவ வாழ்க்கைக்கும் ஏற்ற சட்டதிட்டங்களை ஏற்படுத்தவேண்டுமென்று பகுத்தறிவு இயக்கத்தைச்சார்ந்த மனுஷாபிமானிகள் சொல்லுகின்றார்கள். இன்னும், மதங்களிலுள்ள மூடப்பழக்க வழக்கங்களையும், மூட நம்பிக்கைகளையும் அடியோடு குழி தோண்டிப் புதைத்ததினால் கொஞ்சக்காலத்திற்குமுன் இறக்குந் தருவாயிலிருந்த ரஷியா, துருக்கி போன்ற தேசங்கள் பெரிதும் அதிசயிக்கத்தக்க விதமாய் சகல துறைகளிலும் முன்னேற்றமடைந்து சாந்தியாகவும், சமத்துவமாகவும் வாழ்க்கையை நடத்தி வருகின்ற உண்மையையும் அத்தாட்சியாகக் காட்டுகின்றார்கள்.

ஆனால் தாங்கள் செய்வது முற்றிலும் சூழ்ச்சி யென்பதை உணர்ந்தும், உணராதவர்கள் போன்று நடிக்கும் சுயநலக் கோஷ்டியார்களாகிய மதப்பாதுகாப்பாளர்கள் மதங்கள் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டது, உலகம் கடவுளாலேயே சிருஷ்டிக்கப்பட்டு நடத்தப்படுகிறது, எல்லாம் கடவுளின் திருச்செயல், அவனன்றி ஓரணுவும் அசையாது என்கிறார்கள். கடவுள் இல்லை, 'கடவுள்' என்பது ஒரு வெறுஞ் சொல், கடவுள் நமக்கு வேண்டாம், கடவுள் என்ற பதத்தை அகராதியினின்றுமே எடுத்துவிட வேண்டும், அப்படிச் செய்தாலன்றி உலக மனித சமூகம் ஒருபோதும் ஒற்றுமையும், முன்னேற்றமும், சம உரிமை, இன்பம் அடைய முடியாதென்றும் மிகமிகத் தைரியமாக இன்று முன்வந்து பத்திரிகைகள் மூலமாகவும், பிரசங்க வாயிலாகவும் விஷயங்களை செவ்வனே மஹா ஜனங்கள் உணரும்படி விளக்கிக்காட்டியும், ஆங்காங்குகூடும் சுயமரியாதை மகாநாடுகளில் பகிரங்கமாகத் தீர்மானங்கள் நிறைவேற்றியும், ஏழை மக்களின் பசிப்பிணியையகற்றப் போராடும் பகுத்தறிவியக்கத்தை அடக்கி, நசுக்க சர்வ சக்தி நிறைந்த (?) கடவுளுக்கே முடியாமல் திண்டாடும் போது அவர் பக்தர்களாகிய வைதீகப் பித்தர்கள் கூக்குரலிடுவதை நோக்க நகைப்பு வருகிறது. கடவுள் பகுத்தறிவியக்கத்தை யடக்குவதெப்படி! (அது அவர் அனுமதியின் பேரால் அசைந்து கொண்டிருக்கும் போது!!) என்பதை நினைப்பூட்ட ஆசைப்படுகிறோம். மதங்கள் கடவுளாலேயே உண்டாக்கப்பட்டதென்றால் உலகத்தில் எத்தனையோ மதங்களிருக்கின்றன, அவைகளில் எந்த மதத்தைக் கடவுள் உண்டாக்கினார்? அல்லது எல்லா மதங்களையும் கடவுள் உண்டாக்கினாரென்றால் ஏன் அவர் உண்டாக்கிய மதங்கள் ஒன்றை ஒன்று எதிர்க்கின்றது? நல்லது ஹிந்து மதந்தான் கடவுள் உண்டாக்கினாரென்றால் பின் ஏன் பௌத்த மதத்தை உண்டாக்கி ஹிந்துக்கள் மண்டைகளை பௌத்தர்களும், பௌத்தர்கள் மண்டைகளை ஹிந்துக்களும் உடைக்கும்படி செய்தார்? யூத மதத்தை ஏன் உண்டாக்கினார்? அப்பால் கிறிஸ்தவ மதத்தை ஏன் உண்டாக்கி யூதர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்குமிடையில் பெருஞ் சண்டையை உண்டுபண்ணியதுமன்றி யூதர்களாலேயே தமது குமாரனையும் (இயேசுவை) கிறிஸ்தவர்கள் கடவுளின் மகனென்றும், முஸ்லீம்கள் கடவுளின் தீர்க்கதரிசியென்றும்(நபியென்றும்) சொல்லுகின்றார்கள் இந்த ஒரு விஷயத்திற்காக வேண்டியே கோடானகோடித் தோழர்கள் கொடிய யுத்தத்தில் மடிந்தார்களென்றால் இப்படிச் செய்த கடவுளை மனித சமூகத்தின் பரம விரோதியென்று சொல்லாமல் அளவற்ற அன்புடையோன், நிகரற்ற கருணையுடையோன் என்று எந்த மனுஷாபிமானியேனும் சொல்லுவானா? ஏன் இஸ்லாம் மதத்தை உண்டாக்கிக் கிறிஸ்தவர்களோடும் யூதர்களோடும் கொடிய யுத்தம் புரியும்படி செய்தார்? (எல்லா மதங்களையும், இஸ்லாம் மதத்தையும் கடவுளே உண்டாக்கினார் என்கின்றார்கள். முஸ்லீம்கள் அப்படியாயின், அவரவர் மதங்களில் அவரவர்களிருக்கவேண்டியதற்குப் பதிலாக மற்ற மதங்கள் கடவுளால் உண்டாக்கப்படாதவைகள் போலும். உங்கள் மதம் மட்டுந்தான் கடவுளால் உண்டாக்கப்பட்டது போலும். இதர மதஸ்தர்களை உங்கள் மதத்தில் சேரும்படி சதா என் வருந்தியழைக்கின்றீர்கள் என்று கேட்டால், மற்ற மதங்கள் எல்லாம் அரைகுறையானதென்றும், (கடவுள் விஷயங்களை அரைகுறையாய்ச் செய்து விடுகின்றார் போலும்!) எங்கள் இஸ்லாம் மதம் மட்டுமே சம்பூரணமானதென்றும், எனவே எல்லோரும் அதை ஒப்புக்கொண்டே தீரவேண்டுமென்றும் இன்றேல் நரகத்திற்குத்தான் போவார்களென்றும் சொல்லுகின்றார்கள். ஆனால் இவர்கள் மதத்தைச்சார்ந்த அநேகர் இஸ்லாம் மதமும் பகுத்தறிவுக்கொத்ததாயில்லை என்று நாஸ்திக இயக்கத்தில் சேர்ந்து வருகின்றார்கள்.

பேதாக்குறைக்கு இந்த 20ம் நூற்றாண்டிலும் ஏன் மற்றோர் குட்டி நபியை அனுப்பி இன்னொரு புது மதத்தை (அஹ்மதியத்தை) உண்டாக்கி அனேக தோழர்களைக் கொன்றதுமன்றி இரண்டு தோழர்களை ஆப்கானில் அநியாயமாய் நாட்டிவைத்து கற்களாலெறியப்பட்டு சாகும்படி செய்தார்? (அஹ்மதிய இயக்க ஸ்தாபகராகிய மிர்ஸாகுலாம் அஹ்மத் என்பார் இஸ்லாம் மதம் உண்மையான மதம் உயிருள்ளமதம் என்றும், இதர மதங்களெல்லாம் உயிரற்ற மதங்கள் என்றும் தனக்கு இந்த இரகசியத்தை கடவுள் அறிவித்தார் என்றும் ஆதலால்தான் ஓர் நபியென்றும் (தீர்க்கதரிசியென்றும்) ஆனால் இவர் ஓர் நபியென்பதற்கு அஹ்மதிகளைத்தவிர இதர முஸ்லிம் வகுப்பார் குர் ஆனிலும் ஹதீனிலும் ஆதாரமில்லையென நிராகரித்து விட்டதோடு இஸ்லாமதத்தின் வைரியென்றும், முற்றிலும் வழிகெட்டவர் என்றும் சொல்லுகிறதை அஹ்மதிகள் மறுத்து இவர் நபியென்பதற்கு குர் ஆனிலும், ஹதீனிலும் அநேக ஆதாரங்கள் உண்டென்று வாதிக்கின்றார்கள் என்னே கடவுள் செய்யுங்கோலம்

இவ்வாறே ஒவ்வொரு மதஸ்தரும் தங்கள் மதம் மட்டுமே கடவுளால் உண்டாக்கப்பட்டதென்று தற்பெருமைப்பேசிக்கொள்கின்றார்கள். நிற்க இவைகளில் எந்த மதத்தையாவது ஒன்றை கடவுள் படைத்தார் என்று வைத்துக்கொண்டால் மற்ற மதங்களெல்லாம் மனிதர்களால் உண்டாக்கப்பட்டதென்றுதானே அர்த்தம்? அப்படியாயின் கடவுளுக்கும் மனிதர்களோடு சண்டைபோடுவதற்கு விருப்பம்போலும், அப்படிப்பட்ட அசட்டுக்கடவுளாலும் அவரால் உண்டாக்கப்பட்ட ஒரு மதத்தாலோ அல்லது பல மதங்களாலோ உலகில் நடந்த யுத்தங்களும், பஞ்சங்களும் போதும்! போதும் இனியொருபோதும், அப்படிப்பட்ட அக்கிரமங்கள் உலகில் நடவாதிருக்கும் பொருட்டு கடவுளையும், மதங்களையும் எதிர்த்தே தீரவேண்டும். நிற்க இவ்வாறு கடவுளால் உண்டாக்கப்பட்டதென்று சொல்லப்படும் மதங்கள்தான் ஒன்றை ஒன்று தாக்குகிறதென்றால் ஒவ்வொரு தனித்தனி மதங்களிலேனும் ஒற்றுமை இருக்கிறதா என்று பார்த்தால் அது இவைகள் எல்லாவற்றிலும் மிகமிகக் கேவலமாகவே இருக்கின்றன. ஏனெனில் ஒவ்வொரு மதத்திலும் அனேக உட்பிரிவுகளிருக்கின்றன. ஒரே மதத்தில் உள்ள ஒரு பிரிவார் மற்றொரு பிரிவாரை மிகமிகக் கேவலமானமுறையில் தாக்குகின்றார்கள். எல்லா மதங்களிலும் சிறந்ததென்றும், மூடக்கொள்கைகளற்றதென்றும், விஞ்ஞானத்துக்கொத்ததென்றும் சகோதரத்துவமும், சமத்துவமுள்ளதென்றெல்லாம் (அனுஷ்டானத்திலில்லாமல், வாயல் பேசுவதாலும் பத்திரிக்கைகளில் எழுதுவதாலும் என்ன புண்ணியம் விளைந்துவிடுமோ நாமறிகிலோம்) தன்னைத்தானே தற்பெருமையாய் புகழ்ந்து கொள்ளும் இஸ்லாம் மதத்திலும் பொதுவாக எண்ணிறந்த உட்பிரிவுகளிருப்பினும் குறிப்பாக அஹ்மதிகளை ஸுன்னிகளும் மற்ற இதர பிரிவார்களும் தீண்டப்படாதவர்களிலும் கொடியவர்களாகவே நடத்திவருகின்றார்கள். எனவே உலகில் கொலை, களவு, விபசாரம், சூது, பொறாமை, சூழ்ச்சி போன்ற பஞ்சமாபாதகங்கள் நடைபெறுமலும், மதம், ஜாதி, தேசம், வருணம், நிறம், தோட்டி, தொண்ட

மான், ஆண்டி, அரசன், ஏழை, பணக்காரன், தொழிலாளி, முதலாளி, பெண், ஆண் போன்ற வித்தியாசங்கள் இல்லாமலும், பஞ்சம், நோய், போர் போன்ற துன்பங்களில்லாமலும் உலக மனித சமுகம் ஒன்றுபட்டு ஒற்றுமையடைந்து எல்லோரும் ஒருதாய் பெற்றபிள்ளைகள் போன்று, சாந்தியாகவும், சகோதரத்துவமாகவும் சரிநிகர் சமத்துவமாகவும் இன்புற்று வாழ்வதற்கு கடவுளும், மதங்களும் முட்டுக்கட்டையாயிருப்பதால் முதல் முதல் அந்த இரண்டையும் உலகில் நிலைபெறவொலாட்டமால் செய்யவேண்டியது நமது நீங்காத முக்கிய கடமையாகும்.

பொன்மலை சுயமரியாதை சங்கம்.

27-1-34 மாலை 6-30 மணிக்கு நமது சங்கக்கட்டிடத்தில் ஒரு வாரந்திரக் கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்திற்கு தொழர் டி. கே. ராஜரெத்தினம் அவர்கள் தலைமை வகித்தார். ஆரம்பத்தில் தோழர் எஸ். எஸ். ராயப்பன் அவர்கள் "ஸ்திரீபெண்களின் சுதந்திரம்" என்பதைப் பற்றி நீண்டதோர் சொற்பொழி வாற்றினர் பின்னர் தோழர்களான ஈஸ்வரன், பி. பொன் னுசாமி, எஸ். ராமனுஜம், நடராஜன், மரியசூசை, எம் ஓ. காத்தான் முதலியவர்கள் மேற்கண்ட விஷயத்தைப் பற்றி பேசினர்கள். பின் தலைவர் முடிவுரை கூறிய பிறகு தோழர்கள் எஸ். எஸ். ராயப்பன், ஈஸ்வரன், மரியசூசை முதலியவர்கள் சமதர்மக் கீதங்கள் பாடிய பிறகு அடியில் கண்ட தீர்மானம் நிறைவேறப் பெற்று சுமார் 9 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

தீர்மானம்

கொச்சி ஈழுவ சமுதாய நீரும், பிராமணரல்லாதார் இயக்கம் உயர் பெற உழைத்தவரும், சமதர்ம இயக்கத்தில் ஆழ்ந்த பற்றுடையவருமாகிய சென்னை தோழர் ஓ. சி. சீனிவாசன் அவர்கள் 18-1-34ல் அகால மரணம் அடைந்தார் என்ற செய்தியைக்கேட்டு இக் கூட்டம் பெரிதும் வருந்துவதுடன், அவரது மனைவியாரும், குடும்பத்தாரும் ஆறுதலடையவேண்டுகிறோம்.

கும்பகோணம்.

கும்பகோணம் சுயமரியாதை வாலிபர் சங்கத்தின் பொது கூட்டம் 1-2-34 வியாழக்கிழமை மாலை 6மணிக்குக் கூட்டப்பட்டுகீழ்கண்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேறப்பட்டது.

சமீபகிதில் நடந்த ராஜா நிந்தனை வழக்கில் தண்டனையடைந்த நமது இயக்கத் தோழர்களான ஈ. வெ. இராமசாமி எஸ். ஆர். கண்ணம்மாள் ஆகிய இருவரையும் இக் கூட்டம் பாராட்டி வாழ்த்துகின்றது.

(காரியதரிசி)

கொழும்பு இராமநாதபுரம் ஜில்லா கள்ளிப்பட்டி பகுத்தறிவு அபிவிருத்திச் சங்கம்.

முதல் வருட பூர்த்தி விழா வைபவம்.

சென்ற 20-1-34 சனிக்கிழமை இரவு கொளும்பு பம்பலப்பிட்டி (வில்லியம் ஸ்டுடியோ)வில் கொளும்பு சுயமரியாதைச் சங்கத்தலைவர் தோழர் என். எஸ். எம். ஆறுமுகம் அவர்கள் அவைத்தலைமையின் கீழ் மிக விமரிசையாய் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரளான ஜனங்கள் விஜயம் புரிந்தார்கள். தலைவர் முகவுரைப் பிரசங்கத்திற்குப் பின் சங்க காரியதரிசியால் கடந்த வருட (ரிப்போர்ட்) வாசிக்கப்பட்டதும். சுயமரியாதை தோழர் கே. பி. பெரியசாமி அவர்கள் (இந்தியாவின் நிலைமையும், பகுத்தறிவாளர் கடமையும்) என்பது பற்றி சொற்பொழி வாற்றினர்கள். இடையிடையே தோழர் எம். பி. சின்ன மணிராஜ் அவர்கள் தலைமையில் சுயமரியாதைச் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. கடந்த வருட உத்தியோகஸ்தர்களாகிய தலைவர் தோழர்கள் வி. ரெங்கசாமி காரியதரிசி தோழர் ஏ. எம். துரைசாமி பொக்கிஷதார். தோழர் பி.எஸ்.ஆறுமுகம் ஆகியோர்களுடைய சேவையைக்குறித்துப் பாராட்டி மேற்படியார்களுக்கு புஷ்ப ஆரங்கள்சூட்டப் பட்டது. தலைவர் முடிவுரைக்குப் பின் காரியதரிசியால் வந்தனோபசாரங்கூற சுமார் 1-30மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது. என கௌரவ காரியதரிசி கே. கே. பி. பெரியசாமி அறிவிக்கிறார்.

காஞ்சீபுரம் நாஸ்திகதொழிலாளர் கிளைச்சங்கம்.

29-1-34ந்தேதி இரவு 7மணிக்கு காஞ்சி தாலுகா 22. செஞ்சுலை மேட்டைச்சேர்ந்த சாலவாக்கம் சேரியில் நாஸ்திகத் தொழிலாளர் கிளைச் சங்கத்தின் ஆதரவின் கீழ் காந்தி பகிஷ்காரப் பொதுக்கூட்டம்தோழர் சி. கே. குப்புசாமி அவர்கள் தலைமையில் நடந்தது.

மற்ரொரு கூட்டம்.

31-1-34ந்தெதி மாலை 6-30மணி மணிக்கு காஞ்சிதாலூக்கா 88 நெ. சுரோத்திரிய கோனேரிக் குப்பம் சேரியில் நாஸ்திக தொழிலாளர் சங்கத்தின் ஆதரவின் கீழ் காந்தி பகிஷ்காரப்பொதுக்கூட்டம் தோழர் சி கே. குப்புசாமி அவர்கள் தலைமைல் நடைபெற்றது.

நாகைதாலூகா குற்றம் பொருத்தாளிருப்பு.

30-1-34ல் குற்றம் பொருத்தானிருப்பு ஆர். சிங்காரவேலு அவர்கள் தலைமையில் நடந்த கூட்டத்தில் நிறைவேறிய தீர்மானங்கள்.

நமது தலைவர் தோழர்கள் ஈ. வெ. ராமசாமி அவர்களையும், எஸ்.ஆர். கண்ணம்மாள் அவர்களையும்ராஜதுவேஷக்குற்றம்சாட்டி 24-1-34 தண்டிக்கப்பட்டதற்காக இக் கூட்டம் வருந்துகிறது.

நாகைக்கு, தோழர் காந்தி வரும் பொழுது கண்டிப்பாக பகிஷ்காரிப்பது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது என்றதீர்மானங்கள் நிறைவேறியதோடு கூட்டம் கலைந்தது.

ஸ்ரீரங்கம் சுயமரியாதைச் சங்கப் பொதுக்கூட்டம்.

நிறைவேறிய தீர்மானங்கள்.

28-1-34ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5-40 மணிக்கு ஸ்ரீரங்கம் சுயமரியாதைக்கட்டிடத்தில் தோழர் டி. பி. சுந்தரம் அவர்கள்தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபற்றது. தோழர்கள தங்கவேலு, வி. ஸ்ரீராமலு ஆகியோரால் 21-1-34ந் தேதி கூடிய காரியக்கமிட்டியின் தீர்மானங்கள் பல நிறைவேறின. தோழர்கள் பாலன், சின்னையா, வி. ஸ்ரீராமுலு முதலியோரால் சுயமரியாதைக்கீதங்கள் பாடப்பட்டபின் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பட்டன.

"கல்வி இலாகாவின் நிர்வாக முறையையும், அதனுடைய குறைபாடுகளையும் எடுத்துச்சொல்லி பிரசாரம் செய்து வந்ததற்காக தண்டிக்கப்பட்டு சிறைசென்ற சுயமரியாதை இயக்கத்தலைவர் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்களையும் அன்னார் சகோதரி எஸ். ஆர். கண்ணம்மாள் அவர்களையும் இக் கூட்டம் பாராட்டுகிறது"

பீகார்மாகாணத்தில் ஏற்பட்ட பூகம்ப அதிர்ச்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு இச்சங்கம் அதன் சகாய நிதிக்காக இச்சங்கத்தின் மூலதனத்திலிருந்து ரூ 5கொடுத்துதவவேண்டும்.

"ஹரிஜன இயக்கத்தின் பெயரால் வருணாச்சிரம பிரசாரம் செய்துவரும் முதலாளிகளின் தரகர் தோழர் காந்தி அவர்களின் திருச்சி விஜயத்தைப் பகிஷ்கரிக்க வேண்டுமாய் இக் கூட்டம் திர்மானிப்பதுடன் அதன் சம்பந்தமான துண்டுப் பிரசுரங்கள் வெளியிட வேண்டுமாயும் இக் கூட்டம் தீர்மானிக்கிறது"

இறுதியாக தோழர் டி. துரைசாமி அவர்களால் வந்தனோபசாம் கூறப்பட்டு கூட்டம் மாலை 6-50மணிக்கு இனிது முடிந்தது.

கோயமுத்தூர் பீடி தொழிலாளர் சங்கம்.

2-2-34 வெள்ளிக்கிழமை 6 மணி சுமாருக்கு வைஸ் பிரசிடெண்டு ஜனப் எம். ஹைதர் அவாகளின் தலைமையின் கீழ் ஒரு ஸ்பெஷல் மீட்டிங் நடை பெற்றது. சங்க காரியதரிசி எ. எம். யூசுப்மரைக்காயர் சங்க நடவடிக்கைகளை சபையில் வாசித்து காட்டினர். தலைவர் முடிவுரைக்குபின் ஜனப்களான கே. நானு சாஹிப், என். இபுறுஹிம் சாஹிப் சங்கமென்பதுபற்றிபேசுங்கால் சங்கத்தின் முன்னேற்றத்தைப் பற்றியும் அதன் லக்ஷியங்களையும் மெம்பர்கள் சங்கத்தின் மீது அபிமானம் கொள்ளத்தக்கவாறு உபன்னியாசம் செய்தார்கள். ஜனப் எம். ரஜாக்சாஹிப் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் 7மணிக்கு இனிது கலைந்தது.

நெ. 16

மணமகன் தேவை

16வயதுடையவரும், 5வகுப்பு வரை பயின்ற வரும், சைவ வேளாளவகுப்பைச் சேர்ந்தவரும், மாநிறமும் தக்க உடலமைப்புமுடைய கன்னிப்பெண்ணுக்குமணமகன் தேவை.

மணமகன்:— 25வயதிற்குட்பட்டவரும், படித்து உத்தியோகத்திலோ அல்லது வியாபாரத்திலோ மாதம் 25ரூபாய் சம்பாத்திய முடையவரும் வேளாளர், நாயுடு, ரெட்டியார் ஆகிய வகுப்பைச் சார்ந்தவரும், திடகாத்திர சரீர முடையவராகவும் இருத்தல் வேண்டும்.

நெ. 17

மணமகள் தேவை

---

21 வயதிணையுடையவரும் ஹையர் கிரேடும், தேகப்பயிற்சி டிரெயினிங்கும் பாஸ்செய்தவரும் ஹெட்மாஸ்டர் வேலையில்மாத வருவாய் ரூபாய் 25யுடையவரும், மாநிறமும் 5,6அடி உயரமுள்ளவரும்மணமாகதவரும் கம்பீரத்தோற்ற முள்ள வருமான முஸ்லீம் சமதர்ம நாஸ்திக வாலிபருக்கு மணமகள் தேவை.

மணமகள்:—18வயதிற்குட்பட்டவராகியும் ஹையர் கிரேட் பாஸ்செய்தவராகவோ அல்லது மருத்துவ டிரெயினிங் பாஸ் செய்தவராகவோ இருப்பவராயும் விதவை அல்லதுகன்னியராகவும் எம்மதச் சாதியினராகவும் வனப்பினராயும் இருத்தல் வேண்டும்.

விருப்பமுள்ளவர்கள் 0-1-3 தபால் தலைகளுடன் விண்ணப்பம் செய்துகொள்ளவேண்டும்.

காரியதரிசி தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கம் நெ. 22, பாளையம் பஜார் உறையூர், (திருச்சி)

[4-ம் பக்கத் தொடர்ச்சி]

உண்டாகித்தான் இருக்கும். இல்லாவிட்டால் பொது மக்கள் நலத்தை மாத்திரம தனியாகக் கருதித் தியாகம் புரியும் சர்க்கார் பிரதிநிதி போலீஸ் அதிகாரி அங்கு வந்திருக்க முடியுமா?

தொழிலாளிகளான வேலாயுதன் கந்தன் ஆகிய இருவரைப் போலீஸ் அதிகாரி கைது செய்தார். ஆலை முதலாளிக்கு விரோதமாகத் தொழிலாளிகளைக்கலகம் செய்யும்படி தூண்ட உத்தேசித்ததற்காகத்தான் அந்த இருவர் மீது ஏற்பட்ட குற்றம்.

இருவரையும் போலீஸ் அதிகாரி கைது செய்து விட்டு, மற்றத்தொழிலாளர்கள் அங்கிருந்து கலைந்துபோக வேண்டியதற்காகப பயமுறுத்தும்போது வேலாயுதன் முதலிய இருவரும் செய்தபெருங் குற்றத்தை விசாரித்துச் சொல்லிக்கொண்டிருந்தார். என் கையிற் கிடைத்த கொஞ்சம் பாலையும், வாழைப் பழங்களையும் ஏந்தி என் நண்பரை நோக்கித் துரிதமாக அந்த வழியாக நான் வரும்போது ஒரு அதட்டல் வார்த்தை என்னை வழி மறித்தது. என்பெயர் சுப்பன் என்று விடைசொன்னேன். மீண்டும் போலீஸ்காரர்—உன் பெயர் விநாயகம் அல்ல?கலகத்தைத்தூண்ட உத்தேசித்தவனல்லவா நீ? வேலாயுதம் கூட்டாளியல்லவா நீ? என்று கேட்டார். நல்ல வேளையாக எனக்கு வந்த சிரிப்பை மற்றொரு துக்கம் தடுத்து விட்டது. ஐயா கலகம் செய்யத் தூண்டும் உத்தேசத்தைஎவ்வாறு நீங்கள் கண்டறிந்தீர்கள்.?

போலீஸ்:— இங்கிலீஷ் ஆட்சி "ஒருவனுடைய இருதயத்தைத் தடவி ஆராயும் வலிமையுடையது" தெரியுமா?

நான்:— தங்களைப் பரிதாபமாகக் கெஞ்சுகிறேன். ஒவ்வொருவனுடைய இருதயத்தையும் இது வரைக்கும் தடவிப் பார்த்ததில் சர்க்கார் எதிர்ப்புகள் தட்டுப்படுவது தவிர அதன் பக்கத்திலேயே ஏழை மக்களின் பசித்துன்பம் தட்டுப்பட்டதே கிடையாதா? அல்லது உழைப்புக்குத் தக்க பயன்கிடைக்காது கொதிக்கும் இதயத்தை—உடையும் நெஞ்சதை உணரும் உணர்ச்சி அற்றுப்போனீர்களா?

உடனே நான் என் நண்பரை நோக்கி ஓடினேன். போலீஸ் அதிகாரி என்னைப்பின் பற்றி வருவதை நான் உணர்ந்தேன்.

ஐயோ எனக்கு ஆகாரம் ஏன்?நான் என் இருதயம வெடித்து விட்டதாக உணருகிறேன் நான் மத்தியானம் சாப்பிட வழியில்லாமற் போயிற்று! நீர் என் திருநாமம். மற்றும் எனது வெளிச்செயல் இவற்றை மாத்திரம் அறிந்தீர். என் உள்ளத்தில் கிடந்த பசித்துன்பத்தையும், அதனால் நான் கொண்ட அவமானத்தையும் நீர் எவ்வாறு அறிந்திருக்க முடியும்? அந்தோ நண்பரே,உலகம் இயங்குகிறது. உலக மக்கள் இயங்குகின்றனர். ஆயினும் அவ்வியக்கம் சந்தோஷத்துக்குரியது போல் சுருசுருப்புடையது போல் தோன்றலாம். இன்றைய உலகின் உட்புரம் எத்தனை கோணல்கள், எவ்வளவு பசித்துன்பம், எவ்வளவு அவமானம், தற்கொலை,அகால மரணம் அனைத்தும் சவக்குழியை நோக்கி எவ்வளவு விரைவாய்ப் போய்க்கொண்டிருக்கின்றன! ஆ! மார்பு......

நண்பரே தேறுதல் கொள்க! என்றேன், இதற்குள் போலீஸ் அதிகாரியும்மற்றவரும் நண்பருக்கு பாலைக்கொடுக்கச் சொன்னார்கள். என் நடுக்கத்தை சமாளித்துக்கொண்டு பாலைத் தூக்கினேன் என் முயற்சி பயனற்றதாயிற்று. என் நண்பர் பிரேதமானார்.

முதலாளியுலகமே! மக்களின் நன்மைக்காக ஆட்சி செய்வதாய்க்கூறும் ஆட்சி நாடகங்களே! ஏழை தொழிலாளர் உள்ளத்தின் சாயை என்நண்பரின் கதியில் அறிகிறீர்களா?

தனி ஒரு மனிதனுக்குஉண விலை எனில் இந்த "ஜகத்"தை அழித்திடுவோம். (பாரதி)

திருச்சியில் காந்தி பகிஷ்காரக் கூட்டம்.

திருச்சியில் தாழ்த்தப்பட்ட வாலிபர் சங்கத்தின் சார்பாக 28 1-34 ஞாயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு காந்தி பகிஷ்காரக் கூட்டமொன்று வரகனேரி உப்புபறை மைதானத்தில் நடைபெற்றது. அது சமயம் ஏராளமானவர்கள் கூடியிருந்தனர். இன்னும் பொன்மலையிலிருந்து சுயமரியாதை சங்கத்தார்கள் வந்து இருந்தார்கள். கூட்டத்திற்கு தோழர் எம். சிங்காரம் தலைமை வகித்தார். தலைவர் கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றியும் காந்தீயத்தை பற்றி கூறிய பின் தோழர்கள் பூவாளூர் செல்வகணபதி,ராமசுப்பிரமணியம், மு. திரவியம், எஸ். அபிமன்னன் பிரசங்கித்த பின் கீழ்கண்ட தீர்மானம் பி. ரெத்தினம் அவர்களால் பிரரேபிக்கப்பட்டு தோழர்கள் கே. ஆறுமுகம் அவர்கள் ஆமோதிக்கப்பட்டு தோழர்கள் கே. மாரியப்பன், டி. வி. சுன்னுசி அவர்களால் ஆதரிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

தீர்மானம்

தோழர் காந்தியார் தீண்டாமை ஒழிப்பின் பேரால் திரட்டப்படும் பொருள் தீண்டாதாருக்கு உபயோகப்படாமல்உயர் ஜாதியினராகிய ஒரு சிலருக்கு உபயோகப்பட இருப்பதனால் காந்தியாருக்கு பண முடிப்பு அளிக்கக் கூடாதெனவும் அன்னாரவரை பகிஷ்கரிக்க வேண்டுமெனவும் பொது ஜனங்களை இக் கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது என காரியதரிசி எஸ். அபிமன்னன் எழுதுகிறார்.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ன்றி சற்று வியாதி பீடித்திருந்த பொருளாதார சமூகக் கட்டை தகர்க்கலாம். ரோம ஏகாதிபத்யம் பின்சொன்ன காரணத்தால் தான் சிதறிப் போயிற்று.

ருஷ்யாவில் சுமார் நூற்றுக்கு எண்பத்தைந்து நபர்கள் விவசாயிகள். சற்றேறக்குறைய ஆயிரம் வருடங்களுக்குமுன் ஐரோப்பாவில் பூமிக்காரன் குடியானவன் என்ற இரு பிளவுகள் இருந்தது போல் ருஷ்யாவில் 1914-ம் வருடம் இருந்தன. ஆகையால் 80-லக்ஷ சதுரமைல்விஸ்தீரணமுள்ள ருஷ்யாவில் 13-கோடி விவசாயிகளை மிரட்டி, வாட்டி வந்த இந்த வெகு சிறிய பூமிக்காரர்கள் இந்தப் பழைய நாகரீகத்தைவிட்டு மீள முடியாமலிருந்தனர். கோகால் [Gogal] புத்தகங்களை வாசித்திருப்பவர்கள் இந்த ருஷ்யா அதிகாரிகளையும், பிரபுக்களையும் பற்றி நன்கு தெரிந்திருக்கலாம். இந்த அதிகார வர்க்கத்தினரும், அவர்களைச் சூழ்ந்திருந்த தட்டாரப் பூச்சிகளும், ஜெர்மனி, பெல்ஜியம், இங்கிலாந்து இன்னும் மற்ற தேசங்களின் நூதனப் பொருள் விருத்தி முறைகளைத் தங்கள் தேசத்தை எட்டவொண்ணாது தடுத்தனர்.

1905-ம் ஆண்டிற்குப் பின்பு சில முதலாளிகள் ருஷ்யாவிலிருக்கும் எண்ணிறந்த சுரங்கங்களையும், மற்ற விளைபொருள்களையும் உபயோகிக்க முயன்றனர். ஆயினும் இந்தப் பழைய ருஷ்ய கவர்ன்மெண்டு சற்றும் பிரயோஜனமற்றதாகவிருந்ததால் வேகமாகத் கைத்தொழில்கள் விருத்தியடையவில்லை. இச் சமயத்தில் மகாயுத்தம் ஆரம்பித்தது.

சண்டை என்ற சண்டமாருதம் ருஷ்யாவைத் தாக்கினபொழுது ருஷ்யா திடீரென்று கீழே விழுந்தது. போல்ஷ்விக்காரர்கள் ருஷ்ய அரசாங்க வர்க்கத்தினரை ஒழிக்கவில்லை. அரசாங்க வர்க்கத்தினர் தங்களையே நாசமாக்கிக் கொண்டனர். 1914முதல் 1917 வரை போர்முனைக்கு சிப்பாய்களை அனுப்பித்து அங்கு அவர்களை போஷிப்பதென்றால் அது சாமான்ய காரியமல்ல. ருஷ்யப் பொதுஜனங்கள் பட்டினி கிடக்க வேண்டியிருந்தது. அவர்களுக்கு துணிகளில்லை. அவசியமான இயந்திரங்களில்லை, இருப்புப்பாதைகளில் நிலக்கரி இல்லாததாலும், வண்டிகள் தளர்ந்து போய்விட்டதாலும், போதுமான ரோலிங் ஸ்டாக் (Rolling stock) இல்லாததாலும் ரயில்கள் போகவில்லை. 1915 முதல் 1917-க்குள் ருஷ்ய பொதுஜனங்களின் வாழ்வு மிகக் கேவலமாய்விட்டது. மிஷின் சாமான்களின் விலை வெகு விரைவாக ஏற ஆரம்பித்தது. நெருப்புப்பெட்டி, மில்துணி, சர்க்கரை இவைகளெல்லாம் அகப்படுவதே அரிதாய் போய்விட்டது.

ருஷ்ய ஜனங்கள் போர் முனையினின்று பின் வாங்கினபொழுது அவர்களுக்கு இந்த அசட்டு சண்டையில் தாங்கள் கலந்துகொள்வதால் சற்றும் பிரயோஜனமில்லை என்று நன்கு தெரியும். மார்ச் 1917ம் வருடம் கெரன்ஸ்கி (Kerensky) ராஜ்ய பாரம் வகித்தபொழுது பொருளாதார நிலைமையிலும், ராஜ்ய நிலைமையிலும் மிகுந்த கலவரத்தில் மூழ்கிய ருஷ்யாவை ஆள எத்தனித்தார்.

பழய சமூகக்கட்டு 1917-ம் வருடம் அழிந்து போனபொழுது ருஷ்யாவின் 13 கோடி ஜனங்கள் ஒரு புதிய கட்டை ஏற்படுத்தவேண்டியிருந்தது. மனிதன் சமூகவாழ்க்கையில் விருப்பப்படும் பிராணி அல்லவா? இந்த 13 கோடி ஜனங்கள் அந்த பழைய கட்டு தளர்ந்து புதுக்கட்டுக்காக தட்டித்தடுமாறும் பொழுது போல்ஷ்விக் அரசாட்சிமுறை தோன்றியது. அம்முறை ருஷ்யாவுக்கு வந்ததின் காரணம் ருஷ்யாவில் பழையமுறை உடைந்து போனதின் காரணமேயன்றி வேறல்ல. இங்கிலாந்து அந்த ஸ்திதியிலிருந்திருந்தால் போல்ஷ்விக் முறை அங்கும் தோன்றியிருக்கும். ஜெர்மெனி பூரணமாக தோல்வியடைந்து, பிரான்ஸின் சேனையால் சிறிதுகாலம் ஆளப்பட்டிருந்தால் அங்கும் அந்த போல்ஷ்விக் முறை தோன்றியிருக்கும்.

போல்ஷ்விக் முறை என்றால் என்ன?

அதுதான் இரண்டாவது கேள்வி. எனக்கும் தோழர் பர்ட்ரண்டு ரஸ்ஸலுக்கும் அதில் பெரும் வித்யாசமிருக்குமென்று நான் நம்பவில்லை. போல்ஷ்விக் முறை சாதாரண லேபர் முறை (Socialism) அல்லது தீவிரபொதுவுடமை முறையாவது (Communism) அல்ல. அது ஒரு பெரும்பாலம். அந்தப்பாலம் முதலாளித்வத்திற்கும், தீவிரப்பொதுவுடமைக்கும் நடுவிலிருக்கும் இருண்ட பாதாளத்தை கடக்கின்றது. முதலாளித்வத்திலிருந்து தீவிர பொது உடமையை நோக்கி செல்லுகின்றது.

ஆகையால் அதிகாரமெல்லாம்

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

ஒருங்கே கூட்டப்பட்டிருக்கின்றது. ஏகாதிபத்யமுறையை கையாளுகின்றது. கம்மியூனிஸ்ட் கக்ஷியைச் சேர்ந்த 600,000 நபர்கள் இந்த ஏகாதிபத்யத்தை ஒரே மனதுடன் நடத்துகின்றனர். சாதாரண ஜனங்களின் பொருளாதார நிலைமை மேம்பாடடைய வேண்டுமென்பதும், இச்ஜனங்களை முதலாளிகள் கொள்ளையடிக்க விடக்கூடாதென்பதும் தான் இவர்கள் நோக்கம். இப்போல்ஷ்விக் அரசாட்சி கைதொழில் கூலியாள்களும் சில நன்குணர்ந்த விவசாய கூலிகளினுடைய ஏகாதிபத்யமென்று சொல்லலாம்.

மற்றய கவர்ன்மென்டுகளுக்கும், ருஷ்ய கவர்ன்மென்டுமுறைக்கும் மூன்றுவித வித்யாசங்களுண்டு. பிர்காக்கள் ஸ்தலமுறையாவது, தாலுகா முறையாவது அனுஷ்டிக்காமல் தொழில் முறையை அனுஷ்டிக்கின்றன. (மதராஸ் சட்டசபைக்கு மதராஸ் ராஜதானியை ஜில்லா, ஜில்லாவாக பிரித்து சட்டசபைக்கு மெம்பர்கள் அனுப்பப்படுகிறார்கள். ஆனால் ருஷ்யாவில் ரயில்வே தொழிலாளர்கள், கிளார்க்குகள், எஞ்ஜினியர்கள், டிராம் ஓட்டுபவர்கள், மில் தொழிலாளிகள், உபாத்தியாயர்கள், கக்கூஸ் வாருபவர்கள் என்று தொழில் விகிதப்படிதான் சட்டசபைக்கு மெம்பர்கள் அனுப்பப்படுவார்கள்) இரண்டாவது நாம் ராஜீய வாழ்க்கையை சிரத்தையுடன் யோசனை செய்து அட்டவணையை வைத்துக்கொண்டு எப்படி நடத்துகிறோமோ அதுபோலவே பொருள் ஈட்டும் முறையையும், செலவழிக்கும் முறையையும் சரியான வழிகளில் யோசனை செய்து நடத்துகின்றனர்.

இங்கிலாந்து, ஜெர்மனி, யுனைடட்ஸ்டேட்ஸ் இன்னும் மற்ற மேல் நாடுகளில் ராஜீயவாழ்க்கை நன்கு தெளிவா, பிளான் செய்யப்பட்டிருக்கிறது. ருஷ்யர்கள் தினசரி வாழ்க்கையையும் அப்படியே நடத்துகின்றனர். நாம ச்றிய பாங்கர்களையும், முதலாளிகளையும், தொழிற்சாலைக்காரர்களையும் அனேகமாக அவர்கள் இஷ்டம்போல் அவர்கள், அவர்கள் தொழில்களை நடத்தவிட்டிருக்கின்றோம். ராஜீய வாழ்க்கையில் கொள்ளைகளை நாம் எப்படி நிறுத்திவிட்டோமோ அம்மாதிரியே, தொழில் முறைகளிலும், பாங்கி நடத்துவதிலும், சுரங்கவேலைகளிலும் ருஷ்யர்கள் லாபக்கொள்ளையை நிறுத்திவிட்டனர்.

மூன்றாவதாக அவர்கள் முக்ய ஜீய சட்டப்படி "வேலைசெய்யாதவனுக்கு கஞ்சி கிடையாது" நம் தேசங்களிலோ பெரிய முதலாளிக்குத்தான் பெரிய வருமானம். இவ்வருமானத்துக்காக அவன் ஒரு துரும்பைக்கூட நகர்த்தியிருக்கமாட்டான். சோவியத் சட்டபிரகாரம் அந்த மனிதனுக்கு வோட்டுக்கூட கிடையாது அவன் ஒரு உத்தியோகத்தையும் வகிக்கமுடியாது. அவன் அவனுடைய சொத்தைக்கூட பலவிதங்களில் உபயோகிப்பதற்கு தடுக்கப்படுவான்.

இம்மூன்று விதங்களில் சோவியத் அரசாட்சி மற்றய அரசாட்சியிலிருந்து வித்தியாசப்படுகின்றது. முதலாவது தொழில் பிர்காக்கள் இரண்டாவது பொருள் ஈட்டும் முறைகளையும் செலவிடும் முறையும் பிளான் செய்யப்படுதல். மூன்றாவதாக ஒவ்வொரு ஜீவனும் (தேக அசௌக்கிய நாள்கள் தவிர) ஜனசமுகத்துக்கு எவ்விதமாகவாகிலும் தொண்டு செய்திருக்கவேண்டும்.

இம்முறையை ருஷ்யர்கள் வெகு இலகுவில் கையாளவில்லை. இதற்காக வெகு பிரயாசப்பட்டனர். லக்ஷக்கணக்கான ஜனங்களை இதற்காகக்கஷ்டப்படுத்தியும் இருக்கின்றனர். ருஷ்யா போல்ஷ்விக்கக்ஷியைச்சேர்ந்த 6-லக்ஷம் நபர்களும் இதற்காக தங்கள் ரத்தத்தையும், சந்தோஷ வாழ்க்கையும் பொருள்படுத்தவில்லை. நாமோ குதூகலமாக சினிமாக்களுக்கும், டிராமாக்களுக்கும், நாட்டிய கச்சேரிகளுக்கும் போய்க்கொண்டிருந்திருக்கின்றோம்.

மேல் நாடுகளுக்கு போல்ஷ்விக் முறை தகுந்ததா? ருஷ்யாவுக்கு எப்பொழுது தகுந்ததாகவிருந்தது? ஜார் சக்கரவர்த்தி படைகளால் சூழப்பட்டு மேன்மையாயிருந்த காலத்திலல்ல. நாற்புறமும் தோற்கடிக்கப்பட்டு, ருஷ்ய தொழிலாளிகளும், வேளாளர்களும், மகாயுத்தம் தங்கள் நன்மைக்காக ஏற்பட்ட சண்டையில்லையென்று அறிந்தபொழுது தான் ருஷ்ய ஜனங்கள் முக்யமுமான மில்சாமான்களும் இன்னும் மற்ற சௌகரியங்களுமில்லாமல் கஷ்டப்பட்ட பொழுதுதான். சமாதானமும், சாம்ராஜ்யமும், இங்கிலாந்திலும், அமெரிக்காவிலும் எப்பொழுதும் குடிகொண்டிருந்தால் சோவியத் அரசாங்க முறை வரவும் வராது, வேண்டவும் வேண்டாம். ஆனால் தேசங்களுக்குள் பெரும் சண்டையும், தேசத்துக்குள்ளேயே வகுப்புச் சண்டைகளும் முற்றி பொருளாதார நிலைமை சீர்குலைந்தால் ருஷ்யா முறையை அனுஷ்டிக்கவேண்டியது தான்.

தற்காலிக முதலாளித்வ சாம்ராஜ்யம் மேலும், மேலும் விருத்தியடையக் கூடுமா? என்னை இன்று மறுத்துபேசபோகிற தோழர் பர்ட்ராண்டு ரஸ்ஸல் சமீபத்தில் வெளியிட்ட "கைத்தொழில் நாகரீகம்" மென்னும் புத்தகத்தை பாருங்கள் (The Prospects of Industrial civilisation) மேலும் சந்தேகமிருந்தால் வெப் தம்பதிகளின் (Sidney and Beatrice webb) "முதலாளி நாகரீகத்தின் க்ஷிணிப்பு" (The Decay of Capitalist civilisation) என்னும் புத்தகத்தை படியுங்கள் அதற்குமேலும் சந்தேகமிருந்தால் இத்தாலிய பிரதம மந்திரியாயிருந்த தோழர் நிட்டி (Sgr Nitti) யின் "ஐரோப்பாவின் க்ஷிணிப்பு" (The Dceadencc of Europe) என்னும் புத்தகத்தை படியுங்கள். அதுகூட போதாதென்றால் டாஸ்ரிப்போர்டு (Dawes Report) அல்லது ஆயுதபரிஹார மகாநாட்டு ரிப்போர்டையாவது வாசியுங்கள். வெகு சீக்கிரத்தில் உலக ஏகாதிபத்தியங்கள் அடுத்த மகாயுத்தத்துக்கு தயாராகின்றன.

பணத்தில் கொழுத்த அமெரிக்காவில் நாம் வசிக்கிறோமென்று நிம்மதியாக இருந்துவிடாதீர்கள். ஜெர்மனியர்களும் அப்படித்தான் 1913ம் வருடம் நினைத்தனர். அது சுமார் 15 வருடங்களுக்கு முன்புதான். ருஷ்யா சக்ரவர்த்தியும் அப்படித்தான் நினைத்திருப்பார். பத்து வருடங்களுக்குப்பின்பு என்ன நடக்குமோ யாருக்குத் தெரியும்?

ஆனால் முதலாளித்வமுடைந்து ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும் ஜனங்கள் கஷ்டப்படும் பொழுது இந்த ருஷ்யர்களைப் போலவர்கள், தைரியத்துடனும், வீரத்துடனும், ஒன்று சேர்ந்து கொஞ்சகாலத்திற்கு வீண் அசடர்களை பிதற்றக்கூட விடாமல் ஒரே மனதாய் பொதுவுடமைத் தத்வங்களைபிரயோகித்துப்பெரும் புயல்காற்றால் இடிந்துபோன நம் நாகரீகத்தை புதுப்பிப்பார் எனபதற்கு சிறிதும் ஐயமில்லை.

[தொடரும்]

மன்னார்குடி

சுயமரியாதைக் கூட்டம்.

28-1-34 மாலை 6-மணிக்கு இவ்வூர் சுயமரியாதைச்சங்க ஆதரவில் தோழர் எம். தர்மலிங்கம் அவர்கள் தலைமையில் ஓர்பொதுக்கூட்டம் நடைபெற்றது. நாகை தோழர் என். பி. காளியப்பன் அவர்களால் "சுயமரியாதையும், சென்னை சர்க்காரும்" என்னும் பொருள்பற்றி சுமார் இரண்டுமணி நேரம் பேசியபிறகு, கீழ்க்கண்ட தீர்மானங்கள் தோழர் என். பி. காளியப்பன் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, தோழர் கே. ஆர். ஜி. பால் அவர்களால் ஆமோதிக்கப்பட்டு ஏகமனதாக நிறைவேறியது.

தீர்மானங்கள்.

(1) ஈரோடு "குடிஅரசு" பத்திரிகையின் ஆசிரியரும், பதிப்பாளருமாகிய தோழர்கள் ஈ. வெ. இராமசாமி அவர்களும் சா. ரா கண்ணம்மாள் அவர்களும், எந்த சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு தண்டிக்கப்பட்டார்களோ, அந்த சட்டமானது பிரிட்டிஷ் ஆட்சியின்கீழ் சட்டத்தையும் சமாதானத்தையும்விரும்பும் பிரஜைகளின் உரிமைகளைப் பறிமுதல் செய்வதாக இருப்பதால் ஷை சட்டத்தை அமுலில் நடத்திவரும் சென்னை சர்க்காரின் மனோபாவத்தைக் கண்டிப்பதுடன், ஷை சட்டத்தை துர்வினியோகப்படுத்தாது இருக்கும்படி சென்னை சர்க்காரைக்கேட்டுக் கொள்கிறது.

(2) 24-1-34ல் சர்க்காரால் விதிக்கப்பட்ட தண்டனையை மகிழ்ச்சியுடன் வரவேற்று சிறை சென்ற தோழர்கள் ஈ. வெ. இராமசாமி அவர்களையும், சா. ரா. கண்ணம்மாள் அவர்களையும் இக்கூட்டம் பாராட்டுகிறது தலைவர் முடிவுரையுடன் சுமார் 8-30க்கு கூட்டம் இனிது முடிந்தது. (காரியதரிசி)

JUST ISSUED.

RIGHT OF TEMPLE-ENTRY

By.
P. Chidanbaram, B.A., B.L.
M. L. A. Nagercoil.

This scholarly work contains "a mine of useful information in a subject which is today engaging the attention of all India."

Nearly 300-Pages Price Re. One net only; by post Rs. 1-2-0.

Copies can be had of:-

"Kudi Arasu" Publishing House, Erode.

R. B. P. Society Ltd., Erode.

R. Darmalingam, General Merchant, Cape Road, Kottar.

ரோஜா முத்தையா

"நவசக்தி" ஆசிரியர் தோழர் திரு. வி.

கலியாணசுந்தரமுதலியார் அவர்களால்

—:O:—

தமிழ் மணம், விடுதலை, பெண்ணுரிமை, தீண்டாமை ஒழிதல், சமரசம், சன்மார்க்கம் ஆகியவைகள் ததும்ப எழுதப்பட்ட அறிய அந் நூல்கள்:—

		ரூ.	அ.
பெண்ணின் பெருமை அல்லது வாழ்க்கைத்துணை	...	2	0
தமிழ்த் தென்றல்	...	2	0
முருகன் அல்லது அழகு	...	1	0
இராமலிங்கசுவாமிகள் திருவுள்ளம் ...	...	0	12
மனித வாழ்க்கையும் காந்தியடிகளும் ...	...	2	8
என்கடன் பணி செய்து கிடப்பதே ...	...	0	8
சைவத்தின் சமரசம்	...	0	8
சைவத்திறவு	...	0	8
கடவுள் காட்சியும் தாயுமானாரும் ...	...	0	4
தமிழ் நூல்களில் பௌத்தம் ...	...	0	4
சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து ...	...	0	8
நாயன்மார்	...	0	3
சைவ சமய சாரம்	...	0	1
இமயமலை அல்லது தியானம் ...	...	0	6
தமிழ் நாடும் நம்மாழ்வாரும் ...	...	0	4
உரிமைவேட்கை அல்லது நாட்டுப்பாடல்	...	0	4
முருகன் அருள் வேட்டல் ...	...	0	4

இந் நூல்கள் எல்லாவற்றையும் ஒரே காலத்தில் வாங்குவோர்க்குத் தபாற் செலவின்றி மணியார்டர் கமிஷன் கழித்து வி. பி-யில் அனுப்பப்படும்.

முருகவேள் புத்தகசாலை,
12, கணபதி முதலித்தெரு, இராயப்பேட்டை, சென்னை.

அமுத சுரபி.

சிறந்த தாதுவிருத்தி இலேகியம்

உயர்ந்த காயகற்பகம்.

இஃது ஆண் பெண் இருபாலருக்கும் எவ்வகைக்காரணங்களினாலாவது இரத்தம் கெட்டு வலிவு குறைந்து, நரம்புக்கட்டுகள் தளர்ச்சியடைந்து இந்திரியக் கசிவு, வெட்டைச்சூடு, கனவிற் கழிதல், விரைவிற் கழிதல், விருப்பின்மை முதலிய துன்பங்களால் புத்திரப்பேற்றுக்கு வகையின்றி வருந்துவோர்களுக்கு அத்தகைய துன்பங்களை நீக்கி அமுதமயமான உடம்பையும், பலத்தையும், நல்லறிவையும் அழகையும், நீண்ட ஆயுளையும், மக்கட்பேற்றையும், பொன்போன்ற மேனியையும் அமுத சுரபி தருமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இது சித்தர்களின் முறை.

40-நாள் மருந்து ரூ. 3—8—0.
20-நாள் மருந்து ரூ. 1—14—0.

மானேஜர்:—

பண்டிட் ஆனந்தம்வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

சுகவழ் கேட்லாக் இனாம்.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள

இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1.	சிதம்பர ரகசியம் ...	0—8—0
2.	சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை	0—4—0
3.	மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை	0—8—0
4.	பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை	0—6—0
5.	மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோக பயிற்சி முறையும் ...	2—0—0
8.	ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை	0—6—0
	சுயராஜ்யம் யாருக்கு ...	0—1—0
	சாமிகளின் அற்புதங்கள் ...	0—12—0
	சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ...	2—0—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அநுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம்	ரூ.	4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம்	ரூ.	4—0—0

விலாசம்:—

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வியாதியா?

பயப்படவேண்டாம்.

எங்களிடத்தில் சகல வியாதிகளுக்கும் உயர்ந்த பஸ்ப செந்தூர வகைகள் கிடைக்கும். 30 வருஷகாலமாக அநுபோக முள்ளது. உத்திரவாதமுள்ளது. ஆண் பெண், வயது, வியாதி, உற்பத்தி காலம், தெரிந்தவரையில் எழுதி மருந்தை வரவழைத்துச்சாப்பிடுங்கள்; சுகமாகும்.

தாம்பரபஸ்பம குஷ்ட ரோகங்களுக்கு அனுபானத்துடன் ½ மண்டலம் பாதி விலைப்படி ரூ. 12—8—0.

தாளக பஸ்பம் க்ஷயரோகங்களுக்கு அனுபானத்துடன் மண்டலம் ரூ. 12—8—0.

ஆர். எம். நாராயணசாமி,
தன்மவந்திரிஒளஷதசாலை ...

"குடி அரசு" புதிய வால்யூம்.

—*—

நமது "குடி அரசு" பத்திரிகையின் 8வது வருஷ மலர்கள் ஒன்றசேர்க்கப்பட்டு புதிய வால்யூம் மிக்க அழகாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

உடனே முந்துங்கள்.

விலை ரூபாய் நான்கு.

"புரட்சி" சந்தாதாரர்களுக்கு விலை ரூபாய் மூன்று.

தபால் சிலவு வேறு.

பணம் முன்னதாக அனுப்பிவிடவேண்டும். இல்லாவிட்டால் கவனிக்கப்படமாட்டாது.

மானேஜர்,
குடி அரசு பதிப்பகம், ஈரோடு.

தீராத வெட்டை நோ...

உத்திரவாதம்.

11-நாட்களில் குணமாகும் 22 மா...
...ந்து பாட்டில் 1-க்கு ரூ. 5—0—0. (...
...கம்) எவ்வித பத்தியமும் கிடையாது.

விலாசம்:— கா. நமசிவாயம், (...
தென்னூர்த்தி...
திருச்செ...

குடி அரசு பதிப்பக புஸ்தகங்கள்.

மதமும், லெனினும்.

விலை அணா 0—4—0

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

பொதுவுடமைத்தத்துவங்கள்.

விலை அணா 0—3—0.

இராமாயண ஆராய்ச்சி.

முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோதயா காண்டம் அணா. 0—8—0

ஞானசூரியன்.

பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதன் விலை அணா. 0—2—0.

தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இதன் விலை அணா 0—3—0

பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இதன் விலை அணா 0—4—0

மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இதன் விலை அணா 0—3—0

அகத்தியர் ஆராய்ச்சி.

இதன் விலை அணா 0—2—0

ரஷ்யாவைப் பற்றி பெர்னட்ஷா.

விலை அணா 0—1—0.

கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதன் விலை அணா 0 2—0

கடவுளும், பிரபஞ்சமும்.

இதன் விலை அணா 0—4—0.

சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபை எழுதியது விலை அணா. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

இரா[illegible]ங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

சுய[illegible]தைப்பாடல்.

விலை அணா 0—2—0.

[illegible]பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

[illegible]ரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழக வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும்.

விலை அணா 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை.

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்து ககாட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல்.

விலை அணா 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணா 2.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

விலாசம்:—

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.

முன்னேற்றம்.

பிரிட்டிஷ் மலேயா நாடுகளில் முதன்மை வாய்ந்த நமது சுயமரியாதை இயக்கப்பத்திரிகை.

மலாய் நாட்டிற்கு வருட சந்தா ஷில்லிங். 5—0—0.

வெளிநாடுகளுக்கு ரூ. 8-0-0

'பிரசண்டமாருதம்'

சுயமரியாதை இயக்கக்கொள்கைகளை அடிப்படையாகக்கொண்ட சிறந்த மாதப்பத்திரிகை

உள்நாடுவருடசந்தா ரூ. 1—0—0
வெளிநாடு .... ரூ. 1—8—0
தனிப்பிரதி 1½ அணா

விலாசம்:—
மானேஜர்.
பிரசண்டமாருதம் ஈரோடு.

[illegible]ம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் ஈ. வெ. கிருஷ்ணசாமி அவர்களால் வெளியிடப்பட்டது.